13TH FEBRUARY 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 69 | பக்கங்கள் - 14 | editor.uthayam@gmail.com

## ட்ரம்ப் – புட்டினுடன் சந்திப்பு

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் பேச்சுவார்த்தை க்குத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தேரவித்துள்ளார்.

சவூதி அரேபியாவில் இடம்பெறவுள்ள இப் பேச்சுவார்த்தையின் போது காஸா விவகாரம்

02ம் பக்கம்பார்க்க...

# யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிப்போம்

## திட்டமிட்டபடி கைதிகளை விடுவிப்போம்; ஹமாஸ் தரப்பு உறுதி

யுத்த நிறுத்த விதிமுறைகளை இஸ்ரேல் மீறினாலும் தமது அமைப்பு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி செயற்படுமென்றும் ஏற்கெனவே திட்டமிட்டபடி கைதிகளை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்துள்ளது.

சனிக்கிழமைக்குள் திட்டமிட்டபடி கைதிகளை விடுவிக்கா விட்டால் காஸா மீண்டும் தாக்கப்படுமென்றும் நரகத்தின் வாயில்கள் திறக்கப்படுமென்றும் டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

என்றாலும் இஸ்ரேல் யுத்த நிறுத்த விதிமுறைகளை மீறி வருவதால் தாம் ட்ரம்பின் அச்சுறுத்தலுக்கு அடிபணிய மாட்டோம் என ஹமாஸ் பதிலடி கொடுத்திருந்தது.

என்றாலும் நிலைமையின் பாரதூரத்தை உணர்ந்த எகிப்தும்,கட்டாரும் ஹமாஸ் பிரதிநிதிகளைச் சந்தித்து யுத்த நிறுத்தத்தின் பிரகாரம் செயற்படும்படி கேட்டுக் கொண்டதையடுத்து அவர்களும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதன்படி எதிர்வரும் சனிக்கிழமை (15) திட்டமிட்டபடி மூன்று பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு ஹமாஸ் உறுதி செய்துள்ளது.

## குர்ஆன் பிரதிகளை விநியோகிப்பது தொடர்பில் தீர்மானம்!

சவூதி அரேபியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 15000 குர்ஆன் பிரதிகளை விநியோகிப்பது தொடர்பான உயர் மட்ட மாநாடொன்று புத்த சாசன மத விவகார அமைச்சர்

02ம் பக்கம்பார்க்க...

## உள்ளூராட்சி தேர்தலை ஏப்ரல் இறுதியில் நடாத்துமாறு எதிர்க்கட்சிகள் அரசிடம் கோரிக்கை!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஏப்ரல் புத்தாண்டு வரை ஒத்திவைக்குமாறு பல எதிர்க்கட்சிகள் தேசிய

02ம் பக்கம்பார்க்க...



## அழகான உலகைக் கட்டியெழுப்ப அனைவரும் கை கோர்ப்போம்

### டுபாய் மாநாட்டில் ஜனாதிபதி அனுர உரை!

உலக காலநிலை பிரச்சினைகள் வறியவர் செல்வந்தர் என்று பாராமல் அனைவரினதும் கதவுகளை தட்டிக்கொண்டிருப்பதாகவும், தேச எல்லைகளைக் கடந்து பயணிக்கின்ற சவால்களுக்கு முகங்கொடுக்க நாங்கள் உலகளாவிய பிரஜைகள் என்றவகையில் ஒன்றிணைய வேண்டும் எனவும் ஜனாதிபதி அநுர குமார

03ம் பக்கம்பார்க்க...

## திங்களன்று வரவு செலவு திட்டம்; இறுதிக் கட்ட கலந்துரையாடலில் ஜனாதிபதி

எதிர்வரும் பெப்ரவரி 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ள 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான இறுதிக் கட்டத்தின் பூர்வாங்கக் கலந்துரையாடல் இன்று (13) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு

03ம் பக்கம்பார்க்க...



## இந்தியாவில் அதிகரித்து வரும் இஸ்லாமிய வெறுப்பு பேச்சு

### 63 முறை வெளிப்படுத்திய பிரதமர் மோடி!

அமெரிக்க அமைப்பு ஆய்வறிக்கை!!

இந்தியாவில்

03ம் பக்கம்பார்க்க...

## நாளை பாராளுமன்ற சிறப்பு கூட்டம்: உள்ளூராட்சி தேர்தல் மனுக்கள் பற்றிய நீதிமன்ற முடிவு தொடர்பாக அறிவிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல்

02ம் பக்கம்பார்க்க...

## தொந்தரவு கூடி வருவதால் குரங்குகளுக்கு தனித் தீவு

நாட்டில் பயிர்செய்கைகளுக்கு தொந்தரவு செய்து வரும் குரங்குகளை பிடித்து தனியான ஒரு இடத்துக்கு அனுப்பி வைக்கும் அரசின் திட்டத்தின் கீழ் அதற்கான ஒரு தீவு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள குரங்குகளை பிடித்து அனுப்பி வைப்பதற்கு தீவு ஒன்று

02ம் பக்கம்பார்க்க...

## ஒரு சில பிரச்சினைகள் காரணமாக ஐ.தே.வுடனான பேச்சு இடை நிறுத்தம்

### எஸ்.எம் மரிக்கார் எம்.பி



ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்குமிடையிலான

02ம் பக்கம்பார்க்க...

## நாட்டை மீட்கும் 10 அம்ச தீவிர வேலைத் திட்டம்

### சஜித் பிரேமதாச அறிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை வகுப்பாக்கத்தின்

05ம் பக்கம்பார்க்க...

## தெஹிவளை மீலாத் வித்தியாலய விவகாரம்; மாற்று இடம் வழங்குவது பற்றி கல்வி அமைச்சு ஆராய்வு

02 >>>





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி

Amãna Bank

## தொந்தரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். கடந்த சில மாதங்களாக தெங்கு உட்பட விவசாய உற்பத்திகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் குரங்குகள் தொடர்பாக தெங்கு அபிவிருத்தி சபை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விவசாய அமைச்சு இது தொடர்பாக ஒரு தீவை தெரிவு செய்திருப்பதாக அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

## தெஹிவளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெஹிவளை மீலாத் வித்தியாலயத்தில் ஏற்பட்டிருக்கின்ற கட்டிட பிரச்சனைக்கு தீர்வாக மாற்று இடம் ஒன்றை வழங்குவது குறித்து கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

கல்வி அமைச்சரால் வழங்கப்பட்ட கட்டிடத்துக்கு சில பௌத்த தேரர்கள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு தேவையான பணத்தை கல்வி அமைச்சு வழங்கி இப் பாடசாலை மாணவர்களின் பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுக்க விருப்பதாக இது தொடர்பான நலன் விரும்பி ஒருவர் உதயத்துக்கு தெரிவித்தார். பிறிதொரு இடத்தில் இப்பாடசாலையை இயக்க வைப்பது குறித்து இப்போது தீவிரமாக ஆராயப்படுகிறது. ஏற்கனவே கல்வி திணைக்களத்தால் வழங்கப்பட்ட கட்டிடத்தை புனரமைப்பதற்காக 30 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சிலர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக இந்த கட்டிடத்தை கைவிடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பான முடிவை சபாநாயகர் நாடாளுமன்றத்திற்கு அறிவிப்பதற்காக, வெள்ளிக்கிழமை (14) காலை 9.30க்கு நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு நாடாளுமன்ற விவகாரக் குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் வைத்தியர் ரிஸ்வி சாலி தலைமையில் இன்று (10) நடைபெற்ற நாடாளுமன்ற விவகாரக் குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதன்படி, நாடாளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 16இன் விதிகளின்படி, பிரதமர் சபாநாயகரிடம் விடுத்த கோரிக்கையின் பேரில் இந்த அழைப்பாணை விடுக்கப்படுகிறது.

இந்த சட்டமூலத்தை பரிசீலிக்க பெப்ரவரி 14ஆம் திகதி தொடர்புடைய அமைச்சர்கள் ஆலோசனைக் குழுவைக் கூட்டவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## திங்களன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் அரசாங்க அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## ஒரு சில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சில பிரச்சினைகளின் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஐக்கிய தேசிய கட்சி உட்பட கூட்டணியாக பல கட்சிகள் ஒன்றிணையும் போது அதன் தலைவராக சஜித் பிரேமதாசவே நியமிக்கப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் போது அவற்றில் பேசப்படாத விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதற்கு யாருக்கும் உரிமையில்லை. யானை சின்னத்திலோ அல்லது தொலைபேசி சின்னத்திலோ உத்தேச தேர்தல்களில் போட்டியிடாமல், புதிய சின்னத்தில் போட்டியிடப் போவதாக அவர்கள் எவ்வாறு கூறலாம்?

உண்மையில் இது ஐக்கிய தேசிய கட்சியுடனான இணைவு அல்ல. ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்கு வங்கியுமில்லை.

மோசடியாளர்களுடன் அல்லது வாக்கு வங்கி அற்றவர்களுடன் இணைவதாக இதனை குழப்பிக் கொள்ள தேவையில்லை என்றார்.

## குர்ஆன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் வியாழனன்று அமைச்சில் நடைபெற்றது.

இக் குர்ஆன் பிரதிகளை வினியோகிப்பது தொடர்பாக சில தரப்பினர் எழுப்பியுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

குர்ஆன் பிரதிகளை வினியோகிப்பது தொடர்பில் இன்னும் ஓரிரு நாட்களில் முடிவுகள் வெளியாகும் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் உட்பட குர்ஆன் தொடர்பான ஆலோசனைகளை முன்வைக்க நியமிக்கப்பட்ட குழுவினரும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் ஆணையத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

சமகி ஜன பலவேகய (SJB) மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பல்வேறு காரணங்களை முன்வைத்து தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எழுத்துப்பூர்வமாக கோரிக்கை விடுத்தன.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இம்மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதால் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பட்ஜெட் முன்மொழிவு பிப்ரவரி 17 முதல் ஒரு மாத காலத்திற்கு நடைபெறும், மார்ச் இறுதியில் மட்டுமே முடிவடையும், இது அவர்களின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை பாதிக்கும்.

"அனைத்து கட்சி உறுப்பினர்களும் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும். 66 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால் அது அவர்களின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என எம்.பி. ஜயசேகர தெரிவித்தார்.

மேலும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த SJB பொதுச் செயலாளர் எம்.பி.ரஞ்சித் மத்தும பண்டார, ஏப்ரல் புத்தாண்டு மற்றும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகளை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமானது.

"பட்ஜெட் சமர்ப்பணத்தின் போது, ஒத்திவைப்பு விவாதம் காரணமாக எதிர்க்கட்சிகளுக்கு நிறைய செய்ய வேண்டியுள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் பங்கேற்க வேண்டும். எதிர்க்கட்சி எம்.பி.க்களை நாடாளுமன்றத்தில் தடுத்து நிறுத்தி தேர்தலை நடத்த அரசு முயற்சிக்கிறதா? என்று கேள்வி எழுப்பினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை காலவரையறையின்றி ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரவில்லை என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மத்தும பண்டார, அதற்கு பதிலாக ஏப்ரல் மாதம் இறுதிவரை சில நாட்களுக்கு ஒத்திவைக்குமாறு அதிகாரிகளிடம் கோருவதாக தெரிவித்தார்.

## ட்ரம்ப் - ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரம் இரு தரப்பு விவகாரங்கள் குறித்து பேசவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரு நாட்டுத் தலைவர்களும் காஸா மற்றும் இதர விவகாரங்கள் குறித்து ஏறத்தாழ ஒரு மணி நேரம் வரை தொலைபேசி ஊடாக உரையாடியுள்ளதாகவும் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.







## அழகான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் உலக அரச உச்சி மாநாட்டில் நேற்று (12) உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி, புத்தாக்கம் மற்றும் அரச நிர்வாக மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கையின் நோக்கு என்ற தலைப்பில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க உரையாற்றினார். இந்த உரையில் நிலையான அபிவிருத்தி மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான இலங்கையின் அர்ப்பணிப்பும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

மானிட வர்க்கம் தொடர்பான முக்கியமான துறைகளில் எதிர்கால உத்திகள் மற்றும் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்த மாநாடு உந்து சக்தியாக அமையும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உலகளாவிய சவால்களுக்கு முகங்கொடுக்க உலகளாவிய கூட்டு செயற்பாடும், முன்னணியொன்றினது அவசியத்தையும் வலியுறுத்தினார்.

சமூக நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சியானது தரமிக்க தேசமொன்றைப் போன்றே வளமிக்க உலகமொன்றுக்கு மிகவும் முக்கியமானதாக அமைகின்றது எனவும், உடன்படிக்கைகளையும் சட்டங்களையும் முறைசார்ந்தவகையில் அமுலாக்குவதும், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் உறுதி நிலையற்ற சமுதாயங்களுக்கு முறைப்படி ஒத்துழைப்பினை வழங்குவதும் , உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காக சுதந்திர ஊடகங்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுக்கு வாய்ப்புக்களை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

டிஜிட்டல் அணுகல் உரிமைகள், சுற்றாடல் உரிமைகள் உள்ளடங்களாக 1948 ஆம் ஆண்டு மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலில் புதுப்பிக்கப்பட்ட உலகளாவிய பிரகடனத்தின் அவசியம் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

உலகளாவிய நிதியளிப்பு நிபந்தனைகள் அதிகரிக்கின்றமை, எதிர்காலத்தில் செலுத்தப்படவுள்ள பெருந்தொகையான கடனைச் செலுத்துதல் மற்றும் இறையாண்மைக் கடன் நெருக்கடிக்கு முகங்கொடுக்க நிகழ்கால சர்வதேச நிதிக்கட்டமைப்பு பலவீனமான வகையில் தயாராகியமையால் உலகளாவிய நோக்கு மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நவீன உலகிற்கு நியாயமானவகையில் சீராக்கிக்கொள்ளக்கூடிய நிதிசார் திருத்தங்களின்பால் மாற்றமடைவது மிகவும் முக்கியமான விடயமாக அமைகின்றது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

அதற்காக பிரஜைகளின் பங்கேற்பு முக்கியமானது என்பதை சுட்டிக்காட்டியதோடு, பிரஜைகள் சுற்றுச்சூழல் மீது பற்றுக்கொண்ட நவீன சியட்டல்களாக மாற வேண்டும் என்பதை ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

மனிதர்களை மையப்படுத்திய எதிர்கால பொருளாதார அபிவிருத்தி குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி, சைபர் பாதுகாப்பு செயன்முறையை நோக்கி உலகம் நகர வேண்டியிருப்பதன் முக்கியத்துவத்தையும், ரொபோக்கள் பயன்பாட்டினால் தொழில் வாய்ப்புக்களை இழக்கின்ற மனித சமூகத்தை வலுவூட்ட கல்வி, திறன் மேம்பாடு,புதிய தொழில் வாய்ப்புக்களை அறிந்துகொண்டு சரியான வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்த வேண்டுமெனவும் அதற்காக உலகத் தலைவர்கள் ஒற்றுமையாக செயலாற்ற வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பிரச்சினைகளைப் போன்றே எமது இதயங்களின் “லப் டப்” ஓசையும் ஒன்றாக ஒன்று சேர்த்து உலகத்தைக் கட்டியெழுப்புவோம்“ என்றும் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

“நாங்கள் சகோதரர்கள் என்றவகையில் ஒன்றாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும்.” என மார்ட்டின் லூதர் கிங் கூறியுள்ளார். “வளமான நாடு - அழகான வாழ்க்கை” என்பதை உருவாக்கிட ஒன்றுசேர்வோம் என்பதை இலங்கை மக்களும் 2024 ஆம் ஆண்டில் வலியுறுத்தினர் என வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். “நாங்கள் ஒன்றுசேர்ந்து அழகான வாழ்க்கையை அழகான உலகத்தை உருவாக்கிடுவோம்” என உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

## இந்தியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்பு பேச்சில் கடந்த ஓர் ஆண்டில் மிகப்பெரிய அளவில் அதிகரித்துள்ளதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஆய்வு நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மத்திய பாஜக ஆட்சியில் சிறுபான்மை மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதாகவும் அவர்கள் அச்சறுத்தல்படுவதாகவும் தொடர்ந்து, குற்றச் சாட்டுகள் எழுந்து வருகின்றன. இந்த நிலையில் வெறுப்பு பேச்சு என்பது ஆளும் பாஜக மற்றும் இந்து தேசியவாத இயக்கங்களின் கொள்கை, சித்தாந்தங்களின் பின்னிப் பிணைந்துள்ளதாக இந்தியா ஹெட் லாப் எனப்படும் அமெரிக்க அமைப்பு தெரிவித்துள்ளது. மேலும் தேர்தல் நேரத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிராக அதிகளவில் வெறுப்பு பேச்சுகள் முன்வைக்கப்பட்டதாகவும் 2023ம் ஆண்டில் இது 233 சம்பவங்கள் என்ற நிலையை கடந்து 2024ல் 1,165 ஆக அதிகரித்துள்ளது என்றும் ஆய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி 63 முறை வெறுப்புணர்வு கருத்துக்களை வெளிப்படுத்தியதாகவும் பாஜக தலைவர்களால் 450 வெறுப்புப் பேச்சுகள் பரப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றால், இந்துக்களின் சொத்துக்களை பறித்து இஸ்லாமியர்களிடம் வழங்கி விடுவார்கள் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் பேச்சும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் இஸ்லாமிய மக்களை ஊடுருவல்காரர்கள் என்றும் பிரதமர் விமர்சித்து இருந்ததும் தேர்தலில் இந்துக்களின் வாக்குகளை பெற சிறுபான்மை மக்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சு ஒரு யுக்தியாக பயன்படுத்தப்படுவதாகவும் அந்த அமைப்பு தனது ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயோத்தி ராமர் கோவில் பாணியில் சர்ச்சைக்குரிய இதர வழிபாட்டு தலங்களையும் கைப்பற்ற வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுத்தாகவும் அந்த நிறுவனம் சுட்டிக் காட்டி உள்ளது. இந்தியாவில் உள்ள 22 கோடி இஸ்லாமிய மக்கல் தங்கள் எதிர்காலம் குறித்து கவலை கொண்டு இருப்பதாகவும் அந்த அமைப்பு தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.


பிரபல எழுத்தாளர்
ராஜன் ஹூல் எழுதிய
‘உயிர்த்த ஞாயிறு அனர்த்த’
(மறைகரம் வெளிப்பட்டபோது)
எனும் நூலை தமிழில் மொழிபெயர்த்து
சிரேஸ்ட ஊடகவியலாளர் என்.எம். அமீன் அவர்கள்.
அண்மையில் கொழும்பு - இலங்கை மன்ற கேட்போர் கூடத்தில்
வைத்து வெளியீடு செய்திருந்தார்கள்.




இப் புத்தகம் தேவைப்படுவோர் கீழ்வரும்
கணக்கு இலக்கத்திற்கு ரூபா. 900 ஐ
(தபால் செலவு உள்ளடங்கலாக ரூ. 900)
வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை வட்ஸ்அப் செய்யவும்.

Account No: **000250007329**
Account Name: **NM Ameen**
Bank: **Sampath Bank**
Branch: Pettha Branch

077 2612288





www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 FEBRUARY 13 - THURSDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஆளுனர் ஹனீப் விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்

இலங்கைசுங்கத்திணைக்களத்தில்323கொள்கலன்களை எவ்வித பரிசோதனையும் இன்றி விடுவித்தது தொடர்பாக மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூஸுப் இனை இலக்காக வைத்து மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரங்கள் குறித்து விசாரணைகள் நடத்துமாறு ஆளுநர் இரகசிய பொலிஸாருக்கு கோரிக்கை விடுத்துள்ளார். மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூஸுப் மற்றும் சில அரசியல்வாதிகளும் ஊடகங்களும் சமூக ஊடகங்களும் தன் மீது மேற்கொண்ட போலி குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தி தனது நட்பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தினை அகற்றி நீதியை நிலை நாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் இரகசிய பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நாட்டின் வர்த்தக துறையில் தனக்கான பெயரை ஏற்படுத்தி கொண்டுள்ள ஹனீப் யூஸுப் முஸ்லிம் சமூகத்தினால் மட்டுமன்றி சகல சமூகத்தினராலும் கௌரவமாக மதிக்கப்படும் ஒரு தொழிலதிபராவார்.

ஏற்றுமதி துறை மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களிப்பு செய்து வரும் ஹனீப் யூஸுப் இந்த அரசின் அழைப்பை ஏற்று ஆளுநர் பதவியை பொறுப்பேற்றார். சம்பளமோ வேற எந்த வசதிகளோ பெறாது ஆளுநர் பதவியை பொறுப்பேற்று சிறப்பாக கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பதவியை அவர் முன்மாதிரி மிக்கதாக, மேலும் இந்த நாட்டுக்காக ஏதாவது ஒன்று செய்ய வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியுடன் இந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டதாகவும், இதில் தோல்வி கண்ட சில குழுக்கள் தன் மீது சுமத்தியுள்ள இந்த குற்றச்சாட்டை தான் முழுமையாக நிராகரிப்பதாகவும் ஆளுநர் தெரிவித்துள்ளார். ஆளுநர் ஹனீப் யூஸுப் ஏற்றுமதி வர்த்தகத் துறை மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கு அளப்பரிய பங்களிப்பு செய்து ஒருவராவார்.

தனது நிறுவனம் மூலம் ஆயிரக்கணக்கானோருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கியுள்ளமை மட்டுமின்றி வறிய மக்களின் வாழ்வை மேம்படுத்த கடந்த பல தசாப்தங்களாக பெரும் பங்களிப்புகளை செய்து வரும் ஒருவர் ஆவார். இப்படிப்பட்ட ஒருவர் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளை சுமத்துவதானது,

இவ்வாறு நல்லெண்ணம் கொண்டவர்கள் நாட்டுக்கு பணியாற்ற முன்வருவதை தடுக்கும் செயலாகவே அமையும். எனவே ஆளுநர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தி அவரது நட்பெயருக்கு களங்கம் ஏற்படுவதற்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன் மூலமே இவர்களைப் போன்ற நல்ல அனுபவம் உள்ளவர்கள் அரச துறைக்கு வந்து நாட்டை கட்டி எழுப்ப உதவுவார்கள். இது குறித்து இரகசிய பொலிஸார் தாமதம் இன்றி விசாரணை நடாத்தி இந்த குற்றச்சாட்டின் பின்னணியை பற்றி தெளிவுபடுத்த வேண்டும்.

குறிப்பாக ஆளுநர் முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவராக இருப்பதனால் அவரை அரசியலில் இருந்து அப்புறப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிதான் இதுவோ என்பது போன்ற சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. இது தொடர்பாக பாரபட்சம் அற்ற விசாரணை நடத்தப்பட்டு இந்த விடயத்தின் உண்மை தன்மையை வெளிப்படுத்துவது அவசியம் ஆகும்.

# ரிஷாட் பதியுதீன்- பிரான்ஸ் நாட்டின் முக்கிய அமைப்புக்குமிடையில் சந்திப்பு!



பிரான்ஸ் நாட்டினை தலைமையகமாகக் கொண்டு செயற்படுகின்ற அகதிகள் மற்றும் குடியுரிமை அற்றோருக்கான பாதுகாப்பு அலுவலக பிரதிநிதிகளுக்கும், அகில இலங்கையில் மக்கள் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (11) கொழும்பில் இடம் பெற்றது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மேற்படி அமைப்பின் பிரதிநிதிகள் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் கட்சியின் செயலாளர் நாயகம் எஸ். சுபைர்தீன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது, இலங்கையிலிருந்து பிரான்ஸ் மற்றும் பிற நாடுகளுக்கு பயணிக்கும் அகதிகளின் நிலைமை உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் பற்றி இரு நாட்டு தரப்புக்களுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

## சர்வஜனவின் ஊடக செயலாளராக ஹஸன் அலி!

சர்வ ஜன கட்சியின் ஊடக செயலாளராக முன்னாள் அமைச்சர் நஸீர் அஹமட் இன் இணைப்பு செயலாளராக பணிபுரிந்த ஹஸன் அலி நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் தலைவர் திலித் ஜயவீர இந்நியமனத்தை வழங்கியுள்ளார்.

ஹஸன் அலி இதற்கு முன்பு பல அமைச்சுக்களின் இணைப்புச் செயலாளராக பணிபுரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடைசியாக அவர் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் இன் இணைப்பு செயலாளராக பணிபுரிந்தார்.

## தேசிய சூரா சபையின் தலைவராக எம்.எம் சுகைர் பதவியேற்பு



தேசிய சூரா சபையின் தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம் சுகைர் தெரிவாகியுள்ளார். அண்மையில் நடைபெற்ற தேசிய சூரா சபையின் பொதுக் கூட்டத்தில் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டது.

எம்.எம் சுகைர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்ததோடு, பாமிஸ்ட் நிறுவனத்தின் தலைவராகவும் பணி புரிந்துள்ளார்.

ஈரான் இஸ்லாமிய குடியரசின் இலங்கை தூ துவராகவும் நீண்ட காலம் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.



# நுஸ்கி நஸீர் பௌண்டேசனினால் கல்ஹின்னை பிரதேச மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கையளிப்பு














2025 ஆம் ஆண்டு தரம் ஒன்றில் சேரும் புதிய மாணவர்களுக்கான நுஸ்கி நஸீர் பௌண்டேசன் (Nuski Nazeer Foundation) அமைப்பு அன்பளிப்பாக வழங்கும் கற்றல் உபகரணங்கள் வழமை போல இவ்வருடமும் கல்ஹின்னை, படகொள்ளாதெனிய, பீரிஸ, ஹல்கொல்லை ஆகிய நான்கு ஆரம்பப் பாடசாலைகளுடன் மாத்தளை, கண்டி, கம்பஹா மாவட்டங்களின் சில பாடசாலைகளுக்கும் அப் பாடசாலைகளின் அதிபர்களிடம் பொருட்கள் அண்மையில் (29.01.2025 ) ஒப்படைக்கப்பட்டன.

மாணவர்களுக்கான பாதணிகள் மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் போன்ற பொருட்கள் நுஸ்கி நஸீர் பௌண்டேசன் அமைப்பு வருடாவருடம் தொடர்ந்து வழங்கி வருவது அனைவரும் அறிந்ததே.

கல்ஹின்னை அல்மனார் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்க நிர்வாகக் குழு உறுப்பினரான நுஸ்கி நஸீர் பழைய மாணவர் சங்கத்தின் (OBA) வேண்டுகோளை ஏற்று இந்த நற்பணியை இம்முறை செய்ய முன்வந்திருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்து அம்ச கருத்து நிலைப்பாடுகளை அடையாளப்படுத்திய எதிர்க்கட்சித் தலைவர்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை மையமாகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்களுக்கு தெளிவூட்டும் முகமான செயலமர்வொன்று இன்று (13) கொழும்பு மொனார்க் கார்டன் ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்றது. தற்போது நிலவும் வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பத்து அம்ச வேலைத்திட்டம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தரவுகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் இங்கு சமூகமளித்தோர் மத்தியில் விளக்கமளித்தார்.

இச்செயலமர்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அடிமட்டத்தில் இருந்து மேல் மட்டம் வரையிலும், மேல் மட்டத்தில் இருந்து அடி மட்டம் வரையிலுமாக பெறப்பட்ட கருத்துக்கள், தகவல் மற்றும் தரவுகளின் அடிப்படையில் இந்தக் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படைக் கொள்கைகளில் காலத்திற்கு ஏற்றாற் போல அவ்வப்போது மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளும் இயலுமை இதில் காணப்படுகின்றன. இந்த முக்கிய கொள்கைகளில் சில திருத்தங்கள் நிகழலாம். இதில் நெகிழ்வுத்தன்மை காணப்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அவர்கள் முன்வைத்த 10 அம்ச கருத்து நிலைப்பாடுகள் பின்வருமாறு

01. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மனிதாபிமான முதலாளித்துவமே அவசியமானதாகும்.

02. பரந்த மனிதாபிமான முதலாளித்துவ கட்டமைப்பிற்குள் வரையறுக்கப்பட்ட அரசாங்க தலையீடு மூலம் ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்ய முடியும்.

03. நலன்புரி அரசைப் பாதுகாத்துக்கொண்டு மாற்று வாய்ப்புகளுக்குத் திரும்புதல்.

04. அடைவுகள் சார்ந்த காலக்கெடுவுடன் கூடிய வறுமை ஒழிப்புத் திட்டத்தை நோக்கி நகர்தல்.

05. நாட்டின் 9 மாகாணங்களிலும் சமநிலையான பொருளாதார வளர்ச்சியை உருவாக்க வேண்டும்.

06. புதிய தொழில்நுட்பத்தால் விவசாயத்தை பரிபூரணமாக்க வேண்டும்.

07. பாகுபாடுகள் இன்றி அனைவரையும் இலங்கையர்களாக வலுவூட்டல்.

08. ஜனநாயகத்தை வலுவூட்டல்.

09. நிலைபேறான அபிவிருத்தி.

10.நாட்டுக்கு பெறுமானம் சேர்க்கும் வெளிநாட்டு உறவுகளை ஏற்படுத்துதல்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் தமதுரையில் சுட்டிக்காட்டினார்.



# அமெரிக்காவின் வரி சீர்திருத்தம், சர்வதேச நாடுகளில் ஏற்படும் மாற்றங்கள்!

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)



சீனா, மெக்சிகோ மற்றும் கனடா நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரியை உயர்த்தி அமெரிக்கா அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவு பிறப்பித்துள்ளார். இதன் மூலம் அதிபர் டொனால்ட் டிரம்ப் இந்த மூன்று நாடுகளுடனும் வர்த்தகப் போரை தொடங்கி இருக்கிறார்.

அதிபர் டிரம்ப் கையெழுத்திட்ட உத்தரவின்படி மெக்சிகோ நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் 25 சதவீத வரி விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கனடா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எரிசக்தி துறை சம்பந்தப்பட்ட பொருட்களுக்கு 10 சதவீத வரியும், மீதமுள்ள அனைத்து பொருட்களுக்கும் 25 சதவீத வரியும் விதிக்கப்படும், அதே போல சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் 10% வரி விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்கள் நடவடிக்கைக்கு எதிர் நடவடிக்கை எடுத்தால் கடும் விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும் என்ற எச்சரிக்கையையும் டிரம்ப் நிர்வாகம் வெளியிட்டுள்ளது. தேசிய நலனை கருத்தில் கொண்டு தான் இறக்குமதி வரியை உயர்த்தி இருப்பதாக டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசின் இந்த அறிவிப்பை தொடர்ந்து கனடா அரசு அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படுவதாக அறிவித்துள்ளது. டிரம்ப் நிர்வாகத்தின் இந்த இறக்குமதி வரி உயர்வு இரு நாடுகளுக்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மீறுவதாக அமைந்திருக்கிறது என ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியுள்ளார். திருப்பி அடிக்கும் மெக்சிகோ மெக்சிகோ அதிபர் கிளாடியா சீன்பாம் டிரம்ப் நிர்வாகத்தின் இந்த நடவடிக்கைக்கு தக்க பதிலடி கொடுப்போம் எனக் கூறியுள்ளார். சீன அரசு இந்த புதிய உத்தரவை தாங்கள் எதிர்ப்பதாகவும் தங்கள் நாட்டு உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்போம் என்றும் தெரிவித்துள்ளது. உலக வர்த்தக கூட்டமைப்பின் விதிமுறைகளை மீறி டிரம்ப் நிர்வாகம் மீறியதாக சீனா குற்றம்சாட்டியுள்ளது.

அமெரிக்க சந்தையில் எதிர்கொள்ளக்கூடிய மற்றொரு சவால் கார்களின் விலை உயர்வு. அமெரிக்க ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்கள் ஒவ்வொரு வாரமும் கனடா மற்றும் மெக்சிகோவுடனான அமெரிக்க எல்லைகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான பில்லியன் டாலர் மதிப்புள்ள இயந்திரங்கள், பரிமாற்றங்கள் மற்றும் பிற கூறுகளை அனுப்புவதால், புதிய கட்டணங்களின் தாக்கத்தை அவர்கள் உணருவார்கள்.

புதிய வரி அமெரிக்க எண்ணெய் மற்றும் எரிவாயு துறையையும் சீர்குலைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது, ஏனெனில் இது கனேடிய எண்ணெயை அதிகம் சார்ந்துள்ளது. அமெரிக்கா இறக்குமதி செய்யும் எண்ணெயில் சுமார் 60% கனடாவிலிருந்து வருகிறது. கூடுதல் செலவுகள் கனடா மற்றும் மெக்சிகோவில் உள்ள எண்ணெய் உற்பத்தியாளர்கள், அமெரிக்க சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் அமெரிக்க நுகர்வோர் ஆகியோரால் ஏற்கப்படும் என்று ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முதன்மையான பொருட்களான எலக்ட்ரானிக்ஸ் பொருட்களின் விலை மேலும் உயரக்கூடும். செல்போன்கள், கணினிகள், வீடியோ கேம்களின் விலைகளும் ஓரிரு மாதங்களுக்குள் உயரக்கூடும்.

பாதிக்கப்படக்கூடிய மற்றொரு தயாரிப்பு மரக்கட்டைகள் ஆகும், இதில் சுமார் 30% கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. மென்மரக்கட்டைகள் மீதான வரிகள் வீடுகளைக் கட்டுவதற்கான செலவை அதிகரிக்கக்கூடும், இது வீட்டுவசதி மலிவு நெருக்கடியை மோசமாக்கும். வீடு கட்டுபவர்கள் நம்பியிருக்கும் இரண்டு அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியில் 70மூ க்கும் அதிகமானவை – மென்மரக்கட்டைகள் மற்றும் ஜிப்சம், இது உலர்வாலுக்குப் பயன்படுத்தப்படுகிறது – கனடா மற்றும் மெக்சிகோவிலிருந்து வருவதாக தி நியூயார்க் டைம்ஸ் மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.இதன் மூலம் அமெரிக்காவில் உள்நாட்டு பயன்பாடுகள் மிகுந்த சிக்கலை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர்.

அதேநேரத்தில் டிரம்ப் கடந்த காலத்திலேயே சீனா மீது வரி விதித்து இருக்கிறார் என்பதால் அது ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால் கனடா, மெக்சிகோ நாடுகள் மீது வரி விதித்தது பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாகவே உள்ளது. சீனாவுடன் டிரம்ப் இந்த இரு நாடுகள் மீது எதற்காக வரி விதித்தார் என்பதற்கான பல்வேறு காரணங்களால் சொல்லப்படுகிறது.

அதற்கு அமெரிக்கப் பொருளாதாரத்தைக் காப்பாற்ற இந்த நடவடிக்கையை எடுப்பதாக டிரம்ப் கூறியிருக்கிறார். அவர் சீனா மீது வரி விதிப்பார் என்பது பலரும் எதிர்பார்த்த ஒன்று தான். கடந்த 2017- 2021 ஆட்சியின் போது கூட டிரம்ப் சீனா மீதான பொருட்களுக்கு இறக்குமதி வரி விதித்திருந்தார். ஆனால், கனடா மற்றும் மெக்சிகோ மீதான வரி பலரும் எதிர்பார்க்காத ஒன்று. அமெரிக்கா தனது எல்லை நாடுகளான கனடா மற்றும் மெக்சிகோவுக்கே வரி விதித்துள்ளது. திடீரென இந்த இரு நாடுகளுக்கு அவர் வரி விதிக்க என்ன காரணம் என்பதை நாம் தெளிவாக அவதானிக்க முடிகின்றது.

மெக்சிகோ, கனடா, சீனா ஆகிய நாடுகளின் சட்ட விரோத குடியேற்றத்தைத் தடுக்கவும், ரவுடிகள், போதைப்பொருட்கள் நாட்டிற்குள் நுழைவதைத் தடுக்கவும் அதிபர் டொனால்ட் டிரம்ப் இந்த தைரியமான நடவடிக்கையை எடுத்துள்ளதாக வெள்ளை மாளிகை கூறியிருக்கிறது. இது தொடர்பாக டிரம்ப் வெளியிட்டுள்ள உத்தரவில், ”இந்த நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு வருவோர் சுகாதாரம் உட்படப் பல விவகாரங்களில் ஒரு அவசர நிலையை உருவாக்கியுள்ளனர்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கிரிமினல் கார்டெல்களுக்கு ரசாயனங்கள் வருவதைத் தடுக்கவும், நாடுகடத்தக் குற்ற அமைப்புகளால் பணமோசடி செய்வதை நிறுத்தவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கச் சீன அதிகாரிகள் தவறிவிட்டனர் என்பதால் சீனா மீது வரி விதிப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது. கனடாவைப் பொறுத்தவரை அங்கிருந்து வரும் போதை பொருட்களைத் தடுக்க கனடா அரசு தவறிவிட்டதாக டிரம்ப் தரப்பு குற்றஞ்சாட்டுகிறது. கனடாவில் போதைப் பொருள் நெட்வொர்க் இப்போது சர்வதேச அளவில் செயல்படத் தொடங்கிவிட்டதாகவும் டிரம்ப் தரப்பு கூறுகிறது.

மெக்சிகோ மீது சட்டவிரோத குடியேற்றம், போதைப்பொருள் கடத்தல், கேங் பிரச்சினையைக் கட்டுப்படுத்த தவறியது ஆகிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகிறது. மேலும், மெக்சிகன் போதைப்பொருள் கடத்தல் அமைப்புக்கள் மெக்சிகோ அரசுடன் கூட்டணி இருப்பதாகவும் வெள்ளை மாளிகை தரப்பு பகீர் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. இதன் காரணமாகவே சீனா மட்டுமின்றி மெக்சிகோ கனடா ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா வரியை விதித்துள்ளன.

இதற்குப் பதிலடி தரும் விதமாகக் கனடா ஏற்கனவே அமெரிக்க இறக்குமதி பொருட்களுக்கு 25மூ வரி விதித்துப் போவதாக அறிவித்துள்ளது. மெக்சிகோ மற்றும் கனடா நாடுகளும் கூட பதிலடியாக வரி விதிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இது சர்வதேச அளவில் வரி போரையே உருவாக்கும் அபாயம் இருக்கிறது.

அமெரிக்காவின் கடுமையான வரிகள், பழிவாங்கும் நடவடிக்கைகளுடன் இணைந்து, கனடா மற்றும் மெக்சிகோவை மந்தநிலைக்குத் தள்ளக்கூடும் என்றும், அமெரிக்கப் பொருளாதாரம் மேலோட்டமான சரிவைச் சந்திக்க நேரிடும் என்றும் பொருளாதார வல்லுநர்கள் எச்சரித்தனர். இந்த அறிவிப்பு அரசியல் நிச்சயமற்ற தன்மையை அதிகரிக்கும் என்றும், பணவீக்க அழுத்தங்களைச் சேர்க்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது, முதலீட்டாளர்கள் விநியோகச் சங்கிலியில் ஏற்படும் இடையூறுகளுக்குத் தயாராக உள்ளனர்.

உறுதியாக எதிர்க்கிறது” என்று கூறியது.

“அமெரிக்காவின் ஒருதலைப்பட்சமான வரி விதிப்பு WTO விதிகளை கடுமையாக மீறுகிறது” என்று வாதிட்டு, இதற்கு நீதியை பெற உலக வர்த்தக அமைப்பில் வழக்குத் தொடரும் என்று சீன அமைச்சகம் கூறியது. அமெரிக்கா விதிக்கும் புதிய வரிகள் ”அமெரிக்காவின் சொந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உதவாதது மட்டுமல்லாமல், சாதாரண பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன” என்று அது மேலும் கூறியது.

”அமெரிக்கா ஒவ்வொரு திருப்பத்திலும் வரிகளை விதித்து மற்ற நாடுகளை அச்சுறுத்துவதற்குப் பதிலாக, அதன் சொந்த பிரச்சினைகளை புறநிலையாகவும் பகுத்தறிவுடனும் பார்த்து கையாளும் என்று சீனா நம்புகிறது” என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. அதாவது அமெரிக்கா முனை மழுங்கிய அறிவுடன் செயல்படுவதாகவும் சீனா கடுமையாக குற்றம் சுமத்தியுள்ளது.

அதே நேரத்தில்”அமெரிக்கா தனது தவறான நடைமுறைகளை சரிசெய்யவும், சீனாவை பாதியிலேயே சந்திக்கவும், அதன் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், வெளிப்படையான உரையாடல்களை நடத்தவும், ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், சமத்துவம், பரஸ்பர நன்மை மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபாடுகளை நிர்வகிக்கவும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது என்று சீனா தனது மன குமுறலை வெளியிட்டுள்ளது.

”அமெரிக்கா ஏற்படுத்தும் இந்த வர்த்தகப் போரில் அல்லது வரிப் போரில் வெற்றியாளர்கள் யாரும் இல்லை” என்று சீனாவின் வெளியுறவு அமைச்சகம் ஒரு தனி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

”கூடுதல் வரிகளை விதிக்கும் நடைமுறை ஆக்கபூர்வமானது அல்ல, மேலும் போதைப்பொருள் கட்டுப்பாட்டில் எதிர்கால இருதரப்பு ஒத்துழைப்பை தவிர்க்க முடியாமல் பாதிக்கும் மற்றும் சேதப்படுத்தும்” என்று சீனா அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் இரண்டு பெரிய பொருளாதார நாடுகளான சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான வர்த்தகம் மிகப்பெரியது, 2024 ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் மொத்தம் கூ530 பில்லியனுக்கும் அதிகமாக இருந்தது என்று வாஷி ங்டன் தெரிவித்துள்ளது.

அதே காலகட்டத்தில், அமெரிக்காவிற்கு சீனப் பொருட்களின் விற்பனை மொத்தம் $400 பில்லியனுக்கும் அதிகமாக இருந்தது, இது மெக்சிகோவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது. சீன ஏற்றுமதியில் மின்னணு மற்றும் மின்சார இயந்திரங்கள் முதல் ஜவுளி மற்றும் ஆடைகள் வரை பொருட்களை வழங்குவதில் சீனா ஆதிக்கம் செலுத்துகிறது.

ஆனால் கடந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலகட்டத்தில் கூ270.4 பில்லியன் வர்த்தக ஏற்றத்தாழ்வு வாஷிங்டனில் நீண்ட காலமாக சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சீனா தனது தொழில்களுக்கு அளித்து வரும் பரந்த அளவிலான அரசு ஆதரவு, அதன் பிராந்தியத்தில் செயல்படும் அமெரிக்க நிறுவனங்களை தவறாக நடத்துவதாகவும் அமெரிக்கா குற்றச்சாட்டுகளைத் வைத்துள்ளது.

இதற்கிடையில் இந்த நடவடிக்கைகள் மூலம் உள்நாட்டு சந்தையில் அமெரிக்க எரிசக்தி விலைகளையும் உயர்த்தக்கூடும் என்று ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். அமெரிக்க கச்சா எண்ணெய் இறக்குமதியில் கிட்டத்தட்ட 60மூ கனடாவிலிருந்து வருவதாக காங்கிரஸின் ஆராய்ச்சி சேவை தெரிவித்துள்ளது. இந்த வரிகள் மெக்சிகோவின் பொருளாதாரத்தை மிக கடுமையாக பாதிக்கலாம்.

மெக்சிகோவின் ஏற்றுமதியில் 80% க்கும் அதிகமானவை அமெரிக்க வாங்குபவர்களின் பங்கு, மேலும் அமெரிக்காவிற்கான ஏற்றுமதிகள் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 20% ஆகும், இந்த வரிகள் ஆண்டு இறுதிக்குள் மெக்சிகோ மற்றும் கனடா இரண்டையும் மந்தநிலைக்குத் தள்ளக்கூடும் என்று கேப்பிடல் எகனாமிக்ஸ் எச்சரிக்கிறது.

ஆண்டு முழுவதும் வரிகள் அமலில் இருந்தால், 2025 ஆம் ஆண்டில் மெக்சிகோவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4% குறையக்கூடும் என்று பாங்கோ பேஸின் பொருளாதார பகுப்பாய்வுத் தலைவர் கேப்ரியெலா சில்லர் கூறினார். ”இந்த வரி பல மாதங்கள் நீடித்தால், மெக்சிகன் பொருளாதாரம் கடுமையான மந்தநிலையில் விழும்,” என்று கருதப்படுகிறது.

இந்த நிலையில் அமெரிக்காவில் பணவீக்கம் அதிகரிப்பதாலும், நுகர்வோர் செலவினம் பலவீனமடைவதாலும், வரிப் போர் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைவதாலும் அமெரிக்கா வளர்ச்சியில் மந்தநிலை ஏற்படும் என்று பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

அமெரிக்காவின் இந்த வர்த்தக நடவடிக்கைகள் சார்ந்த வர்த்தக ஒப்பந்தத்தைப் பகிர்ந்து கொள்ளும் அமெரிக்கா, மெக்சிகோ மற்றும் கனடா இடையேயான பொருளாதாரத்தில் வலுவான உடனடி தாக்கத்தை” ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் மூன்று பெரிய வர்த்தக பங்காளிகள் மீது கடுமையான வரிகளை விதிப்பது டிரம்பிற்கு ஆபத்துகளைக் கொண்டுள்ளது. ஏனெனில் நவம்பர் தேர்தலில் அவர் வெற்றி பெற்றார், பொருளாதாரத்தின் மீதான பொதுமக்களின் அதிருப்தியே இதற்குக் காரணம்.இந்த ஆண்டு முதல் காலாண்டில் கட்டணங்கள் அமலுக்கு வருவதால் பணவீக்கம் 0.7% உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டிரம்பின் ஆதரவாளர்கள், வரிகள் பணவீக்கத்தைத் தூ ண்டும் என்ற அச்சத்தை குறைத்து மதிப்பிட்டுள்ளனர், சிலர் அவரது திட்டமிட்ட வரிக் குறைப்புகளும் கட்டுப்பாடுகளை நீக்கும் நடவடிக்கைகளும் வளர்ச்சியை அதிகரிக்கும் என்று கூறுகின்றனர். அதாவது ட்ரம்ப்ன் எடுத்து வரும் பொருளாதார மாற்றங்கள் அமெரிக்கா சந்தையில் நீண்ட கால மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவர்கள் நம்புகின்றனர் என்பதே யதார்த்தமான இன்றைய நிலையாகும்.

# உள்ளூராட்சி தேர்தலை நடாத்துவதில்
# அரசு காட்டும் தீவிரம், சவாலை ஏற்கும் எதிர்க்கட்சிகள்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் விஷேட ஏற்பாடுகள் சட்டமூல விவாதம் 17 ஆம் திகதி

எம்.எஸ். அமீர் ஹுசைன்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை விரைவாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இந்த தேர்தல் 2025 ஏப்ரில் மாதம் இறுதி வாரத்தில் நடத்தப்படலாம் என்று தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. அதே நேரம் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலம் 2025.02.17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சி உட்பட நான்கு அரசியல் கட்சிகளால் உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கிற்கான தீர்ப்பை உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் அறிவித்திருப்பதால் அந்த தீர்ப்பை சபாநாயகர் அறிவிப்பதற்காக எதிர் வரும் 17 ஆம் திகதி பாராளுமன்றம் கூட இருக்கின்றது.

இதற்கிடையில் கடந்த 05 ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய போது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் அறிவிப்பார் என்று தகவல்கள் வெளியாகி இருந்த போதும் அது வரையில் கறித் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கு அறிவிக்கப் பட்டிருக்கவில்லை.

ஆனாலும் தற்போது உயர் நீதிமன்றம் அந்த வழக்கிற்கான தீர்ப்பை ஜனாதிபதி மற்றும் சபாநாயகருக்கு அறிவிக்க தோவைாயன நடவடிக்கைகளை எடுத்திருப்பதால் 2025.02.10 ஆம் திகதி பிரதி சபாநாயகர் கலாநிதி ரிஸ்வி சாலி தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற விவகாரங் களுக்கான நிறைவேற்று குழுக் கூட்டத்தில் இந்த சிறப்பு எற்பாடுகள் தொடர்பான சட்டமூலத்தை 17 ஆம் திகதியே விவாதிப்பதற்கும் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது. எதிர்வரும் 17 ஆம் திகதி பி.ப. 2.00 மணியில் இருந்து இரவு 7.00 மணி வரையில் இந்த சட்டமூலம் தொடடர்பான விவாதம் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

ஏற்கனவே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை பின்போட்டமைக்கு எதிராக ரனில் விப்கிரமசிங்கா ஜனாதிபதியாக இருந்த போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கான உத்தரவும் அப்போதைய அரசாங்கம் இயன்ற வரை அவசரமாக இந்த தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்பதாகும். ஆனாலும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதும் தேர்தல்கள் நடத்ப்பட்டதால் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்ந்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாததாக மாறிவிட்டது. இந்நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏற்கனவே தேர்தலுக்கு முன்னர் வழங்கி இருக்கின்ற வாக்குறுதிகளின் அடிப்படையில் ஒத்திப் போடப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தலை 2025 ஆம் ஆண்டு நடத்தி முடிப்போம் என்பதாகும்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்த போதும் அந்த தேர்தலை நடத்த பணம் இல்லை என்றும் வாக்கும் இல்லை, தேர்தலும் இல்லை, சட்டபூர்வமாக தேர்தல் ஆணைக்குழு தேர்தல் நடத்துவதென்று எந்த திகதியையும் நிர்ணயிக்கவில்லை. அதனால் தேர்தலும் இல்லை என்றும் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி நடாளுமன்றத்தில் அறிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது நாட்டு மக்கள் அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்த மறக்க முடியத சம்பவமாகும்.

தேர்தல் ஒன்று நடைபெறும் என்று உத்தியோக பூர்வமாகவோ அல்லது அரசியல் அமைப்புக்கு அமைவாகவோ எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்பட வில்லை என்றும் ஜனாதிபதி அதி உண்ணதமான சட்டவாக்க சபையான நாடாளுமன்றத்தில் அன்றைய தினம் அறிவித்தமையானது பாராளு மன்றத்தில் மட்டுமல்லாது நாட்டிலும் அவரை ஒரு மிஸ்டர் பீன் போன்று அனைவரும் பேச ஆரம்பித்தனர்.



2023 ஜனவரி மாதம் 21 ஆம் திகதி வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் வழங்கப் பட்டிருந்தது. அதில் இருந்து அரசியல் கட்சிகள் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரசார நடவடிக் கைகளில் இறங்கி தேர்தல் நடக்கலாம் என்ற நம்பிக்கையில் மும்முரமாக ஈடுபட்டு பெருமளவான தொகைகளை செலவு செய்தும் இருந்தன.

ஆனாலும் தேர்தல் நடத்த அதற்கான 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் இல்லை என்று நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கா தெரிவித்து அப்போதைய சந்தர்ப்பத்தில் நிலைமைகளை தலைகீழாக மாற்றியமைத்தார். இவ்வாறாக தேர்தல் நடத்த ஒதுக்கீடு செய்யப்பட்ட 1000 கோடி ரூபா பணத்தை அதற்காக வழங்காமல் பின்போடப்பட்ட தேர்தலையே இப்போது ஏப்ரில் மாதம் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

விஷேட சிறப்பு எற்பாடுகள் சட்டமூல விவாதத்தில் பிரதானமாக ஏற்கனவே 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக்களை இரத்து செய்து புதிதாக வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய தேர்தல் ஆணைக்குழு கால அவகாசம் வழங்குதல், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கட்டுப்ப பணத்தை அந்தந்த அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களுக்கு மீளச் செலுத்துவதா அல்லது புதிதாக வேட்புமனுக்களை சமர்ப்பிக்கும் போது 2023 ஆம் ஆண்டு செலுத்தி கட்டுப்ப ணத்தை செல்லுபடியானதாக்குவதா போன்ற விடயங்கள் விரிவாக ஆராயப்பட இருக்கின்றது. அத்துடன் எந்த வருடத்தின் தேர்தல் டாப்பில் பதிவு செய்யப்பட்ட தேர்தல் வாக்களிப்பு பதிவுகளின் அடிப்படையில் தேர்தலை நடத்துவது போன்ற விடயமும் ஆராயப்பட இருக்கின்றது.

இந்நிலையில் அரசியல் கட்சிகளும் தற்போது தயாராகிக் கொண்டிருக்கின்றது.

அத்துடன் 202502.17 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தையும் நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கின்றார்.

வரவு செலவுத் திட்ட உரை 12.30 மணி வரையில் இடம்பெற இருக்கின்றது. அதன் பின்னர் பி.ப. 2.00 மணியில் இருந்து உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலம் மீதான விவாதம் நடைபெறும்.

அரசியல் கட்சிகள் திருத்தங்களை சமர்ப்பிப்பதாக இருந்தால் 17 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் அவற்றை சமர்ப்பிக்குமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் அலுவலகம் அறிவித்திருக்கின்றது.

அதே நேரம் இவ்வாறு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படலாம் என்ற அறிவிப்பை தொடர்ந்து தேசிய மக்கள் சக்தியான சஜித் பிரேமதாசா தலைமையிலான சமகி ஜனபலவேகய கட்சி ரனில் விகிகரமசிங்கா தலைமையிலான ஐ.தே.கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடபட்டு வருகின்றது.

இந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்திருக்கின்றது என்ற ஒரு தரப்பும் வெற்றியளிக்கவில்லை என்று இன்னொரு தரப்பும் கூறி வருகின்றனர். சஜித் தலைமையிலான ஐக்கிய மக்ள சக்திக்குள் ஒரு தரப்பினர் ஐ.தே.க. வுடன்நத்தும் பேச்சுவார்த்தை குறித்து அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர்.

கடந்த கால திருடர்களுடன் எதற்காக பேச்சு நடத்த வேண்டும்? ஐ.தே.க. என்ற ஒரு கட்சியோ அல்லது அக்கட்சிக்கான வாக்குகளோ இல்லை என்றும் கூறி வருகின்றர். குறிப்பாக இந்த பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திர கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ளார். ஆனாலும் இதுவரையில் கட்சி தலைவர் மட்ட ரனில் சஜித் பேச்சுக்கள் நடக்கவில்லை.

## யூ.எல்.எம். ஸபீர் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக சத்தியபிரமாணம்



அட்டாளைச்சேனை 07 ம் பிரிவு ரஹ்மானியா பாத் கிராமத்தைச் சேர்ந்த உதுமாலெப்பை முஹம்மது ஸபீர் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக (30.01.2024) வியாழக்கிழமை கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.எம். எம்.ரியால் முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்து கொண்டார்.

எம்.எஸ்.உதுமாலெப்பை, ஏ.எம். சித்தி சனூனா ஆகியோரின் அன்பு புதல்வரான இவர் இலங்கை மின்சார சபையில் கடமையாற்றுவதுடன் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சரின் பிரத்தியேக செயலாளராகவும், ஊடகச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

அக்ஃஅல் - அர்ஹம் வித்தியாலயம், அக்/அல் - ஹிதாயா வித்தியாலயம், அக்/அஸ் சிராஜ் மகா வித்தியாலய பழைய மாணவருமான இவர் HND in Computing & System Development, Diploma in English பாடநெறியை நிறைவு செய்துள்ளதுடன் இளவயதிலேயே தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் கழக அங்கத்துவராகவும், இளைஞர் கழகத் தலைவராகவும் தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளத்தின் தலைவராகவும், மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தின் உப தலைவர், ஊடக செயலாளராகவும் செயற்பட்டுள்ளார்.

## கல்முனை மாநகர உணவகங்களின் பாதுகாப்பு குறித்த கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

புனித ரமழான் காலத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட கல்முனை, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களில் விசேட உணவு பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல் செவ்வாயன்று (11) கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி திருமதி டாக்டர். எஸ்.எப். இசட். சஹ்றாரா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பிராந்திய தொழில் சார் நலன் மற்றும் உணவுப் பாதுகாப்பு வைத்திய அதிகாரி டாக்டர். முஹம்மட் பௌசாட், சாய்ந்தமருது மற்றும் கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் அவர்களுடன் கல்முனை தெற்கு, கல்முனை வடக்கு மற்றும் சாய்ந்தமருது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் முதலானோர் கலந்து கொண்டனர்.



இதன் போது நோன்பு காலத்தில் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படும் உடனடி உணவுகள், கடைகளில் விற்பனை செய்யப்படும் கஞ்சி வகைகள் போன்றவற்றை பரிசோதனை செய்வதுடன் இவ் உணவக உரிமையாளர் களுக்க வழிகாட்டுதல் நடவடிக்கையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

விசேடமாக நோன்பு காலங்களில் சிற்றுணவு வகைகளை விற்பனை செய்ய விரும்பும் வியாபாரிகள் தாங்கள் இவ்வாறு விற்பனையில் ஈடுபட இருப்பதாக உடனடியாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# க. பொ. த உயர் தர மாணவர் மாணவிகளுக்குப் புலமைப் பரிசில் நிதி உதவி வழங்குதல்




**(இக்பால் அலி)**

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் ஏற்பாட்டில் க. பொ. த. உயர் தர வகுப்புக் களில் கல்வி பயிலும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர் மாணவிகளுக்கு புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் கண்டி வை. எம். எம். ஏ. கிளையின் அலுவலகத்தில் தேசியத் தலைவர் அம்ஹர் ஷரீப் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத் தலைவர் முன்னாள் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவருமான எம். எச். சலீம்டீன், முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, சுபைர் ஹஸன் மற்றும் எம். தாஸீம் ஆகிய முன்னாள் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். வை. எம். எம். ஏ. இன் புலமைப் பரிசில் தெரிவுக் குழுவின் தலைவர், ரிஸ்வி பாரூக், மற்றும் மாக்ரிப் ஏ. தாஹா, அன்வர் சதாத் ஆகியோர்களுடன் உப தலைவர்களான யூ. எம். பாஸில், என். எம். நிப்ராஸ், எம். ஆர். எம். சியாட், பொருளாளர் டி. ரி. எம். பிர்தௌஸ் மாவட்டப் பணிப்பாளர்களான எம். ரஹீம், இஹ்திசாம் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கொண்டனர்.

# கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளராக எம்.ஏ.சீ.றமீஸா கடமையேற்பு

**(எஸ்.எம்.எம்.முர்ஷித்)**

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராக எம்.ஏ.சீ.றமீஸ ா உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எம். எச்.எம்.றுவைத், கணக்காளர் ஏ.மோகனகுமார், நிருவாக உத்தியோகத்தர் எம்.தாஹிர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ்.ஏ.எம்.பஷ ீர் ஆகியோரும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளராக கடமையாற்றிய எஸ்.எச்.முஸம்மில் ஏறாவூர் நகர்பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதை ஏற்பட்ட வெற்றிடத்திற்கே எம்.ஏ.சீ.றமீஸா பிரதேச



செயலாளராக நியமிக்கப் பட்டுள்ளார். இவர் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கற்பிட்டி சமூர்த்தி வங்கிக்கான புதிய பரிபாலன சபை தெரிவு

**(சியாஜ்)**

கற்பிட்டி சமூர்த்தி வங்கியின் 2025 ஆம் ஆண்டுக்கான புதிய பரிபாலன சபைக்கான அங்கத்தவர்கள் தெரிவிற்கான கூட்டம் திங்கட்கி ழமை (10) கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கூட்ட மண்டபத்தில் கற்பிட்டி சமூர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் டப்யூ.எம் தினுஷா தலைமையில் இடம்பெற்றது

மேற்படி கூட்டத்தில் கற்பிட்டி சமூர்த்தி வங்கி பிரிவில் உள்ள பத்து கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த வங்கியின் வாடிக்கையாளர் களை உள்ளடக்கிய வண்ணம் பரி-பாலன சபைக்கு ஒரு கிராமம் சேவையாளர் பிரிவில் ஒருவர் வீதம் பத்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அதன்படி 2025 ம் ஆண்டின் புதிய உறுப்பினர்களாக
புதுக்குடியிருப்பு - சர்மிளா,
பெரியகுடியிருப்பு - சப்னா,
சின்னக்குடியிருப்பு - பாத்திமா,



டச்பே - நெலும் குமாரி,
ஆனவாசல் - நதிகா சுபாசினி,
வன்னிமுந்தல் - நஸ்ரின்,
மண்டலக்குடா - ரசாக்கிய்யா,
குறிஞ்சிப்பிட்டி வடக்கு - டயனா சுரங்கி,
கண்ட்குளி குடா - ரேனுகா புஸ்பலதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் பள்ளியாவத்தை பிரிவின் சமூர்த்தி சங்கம் தொடர்ந்து ஒரு வருட காலமாக மகா சபை கூட்டத்திற்கு சமூகமளிக்கா மையின் காரணமாக உறுப்பினர் தெரிவு இடம்பெற வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பாணந்துறை தொட்டவத்தை பள்ளிவாசல்களின் புதிய தர்மகர்த்தாவாக வர்த்தகப் பிரமுகர் ரிஸான் ஏ.பளீல் தெரிவு

**(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)**

பாணந்துறை தொட்டவத்தை அந்நத்வதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலியாச் சங்கத்தினால் தொட்டவத்தை பெரிய பள்ளிவாசல், வேறவத்தை பத்ர் பள்ளிவாசல் மற்றும் இப்றாஹீம் வீதி பள்ளிவாசல்களின் பரிபாலனம் மேற்கொள்ளப்பட்டு



வருகின்றமை குறிப்பிடத்தக் கதாகும்.

இந்த பள்ளிவாசல்களின் புதிய தர்மகர்த்தாவாக தெரிவாகியுள்ள எம்.ரிஸான் ஹாஜியார் பள்ளிவாசல்கள் பரிபாலன சங்கத்தின் முன்னாள் செயலாளர் ஏ.ஜே.அஹமத் பளீல் ஆசிரியரின் சிரேஷ்ட புதல்வராவார்.

# சமூக வலுவூட்டல் வேலைத் திட்டம் தொடர்பாக அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர்களை தெளிவூட்டும் செயலமர்வு





**(இஸட்.ஏ றஹ்மான்)**

அம்பாறை மாவட்ட உத்தியோகத் தர்களுக்கான சமூக வலுவூட்டல் வேலைத் திட்டம் தொடர்பான அறிவூட்டும் செயலமர்வு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் மாவட்ட செயலகத்தின் விக்கிரமசிங்க கேட்போர் கூடத்தில் மாவட்ட செயலாளர் சிந்திக்க அபேரத்ன தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கிராமிய அபிவிருத்தி சமூக பாதுகாப்பு சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ பாராளுமன்ற உறுப்பினர்களான முத்துமனிக்கே றத்வத்த , மஞ்சுள ரத்னாயக்க மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் பாக்கியராஜ், மாவட்ட மேலதிக செயலாளரும் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருமான எஸ். ஜெகராஜன், பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# ஓட்டமாவடி பிரதேச செயலகத்தின் முதலாவது அபிவிருத்தி குழு கூட்டம்

**(எஸ்.எம்.எம். முர்ஷித்)**

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் 2025ம் ஆண்டுக்கான முதலாவது அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று (11) பிரதேச செயலாளர் ஏ.தாஹிரின் ஒருங்கினைப்பில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்தி குழு தலைவருமான கந்தசாமி பிரபு தலைமையில் இடம்பெற்றது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் பட்டு வரும் கிளீன் ஸ்ரீலங்கா வேலை திட்டம் மற்றும் விவசாயிகளுக்கான நிர்ணயிக்கப்பட்ட நெல் கொள்வனவு, காட்டு யானையின் அட்டகாசம் அதனை கட்டுப்பத்துவதற்கான யானை வேலி அமைத்தல், கல்வி அபிவிருத்தி, சுகாதாரம், போக்குவரத்து, மஜ்மா கொவிட் மையவாடிக்கு காணி வழங்கியவர்களுக்கான மாற்று ஒழுங்கு என பலதரப்பட்ட விடயங்கள் இங்கு ஆராயப்பட்டு தீர்வுகளும் காணப்பட்டது.



மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், எம்.எஸ். முகமட் நலீம், தேசிய மக்கள் சக்தியின் பிரதேச செயற்பாட்டாளர் எம்.ஏ.சி.எம். நியாஸ், உதவி பிரதேச செயலாளர் எம்.ஆர்.ஷியாஹுல் ஹக், பிரதி திட்ட பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம். தாரிக், ஓட்டமாவடி கோட்ட கல்வி அதிகாரி ஏ.எம்.எம்.தாஹிர், பிரதேச சபை செயலாளர் எஸ்.எம். சிஹாப்தீன், அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் பொலீஸ் நிலைய உயர் அதிகாரி, விஷேட அதிரடைப்படை உயர் அதிகாரிகள், பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கணிதப்பாட இலவசக் கருத்தரங்கு





**(சியாஜ்)**

புத்தளம் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தர பரிட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணிதப் பாட இலவசக் கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை (09) பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் எச்.எச் நிஸாம்தீன் மற்றும் எம்.பர்ஸாத் ஆகியோரின் அனுசரணையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கின் வளவாளராக திருகோணமலை றொட்டவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கணிதப்பாட ஆசிரியர் என்.ஏ அகில் கலந்து கொண்டதுடன் பாடசாலையின் அதிபர் பீ.எம் முஸ்னி, பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் எம். இஸ்வான் மற்றும் உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

# க்ளீன் சிறீலங்கா திட்டத்தின் கீழ் வட மத்தியில் வீதி புனரமைப்பு பணிகள்



**(எம்.ரீ.ஆரிப்)**

க்ளீன் சீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச வின் பணிப்புரைக் கமைய கிராமிய வீதிகளை புரமைக்கும் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இதன் கீழ் அனுராதபுரம் உழுக்குளம் வீரவெவ ஊடாக சிராவஸ்திபுர வரையிலான ஆறு கிலோ மீட்டர் வீதி கிரவல்மண்ணிட்டு செப்பனிடும் பணி அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சேன நாணயக்கார மற்றும் வடமத்திய மாகாண ஆளுநரின் ஒருங்கிணைப்பு செயலாளர் ஆனந்த ரத்நாயக்க ஆகியோரின் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



# இளம் ஊடகவியலாளர்களால் விழிப்புணர்வு வீதிப்பலகை மட்டக்களப்பில் திறந்து வைப்பு




**(எம்.பஹத் ஜுனைட்)**

கிழக்கு மாகாணத்திலுள்ள இளம் ஊடகவியலாளர்கள் குழுவினால் வீதி விபத்தை தடுக்கும் வகையில் சாரதிகளுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தக் கூடிய வீதி விளம்பர பலகை மட்டக்களப்பு திருகோண மலை பிரதான வீதியின் பிள்ளையாரடி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (09) திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரிதி குமாரன் மற்றும் கிழக்கு மாகாண இளம் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

வீதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வீதி விபத்துக்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான சமூக நிகழ்ச்சி திட்டம் இளம் ஊடகவியலாளர்களினால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அனுராதபுரத்திற்கு நீர்ப்பாசன பிரதி அமைச்சர் கண்காணிப்பு விஜயம்

(எம்.ரீ.ஆரிப் )

கலாவாவியிருந்து அனுராதபுரத்திற்கு நீரைக் கொண்டு செல்லும் ஜயகங்கை ஆற்றின் தடுப்பணை உடைப்பெடுக்கும் அபாயத்தில் உள்ளதாக எப்பாவல கோன்வெவ பிரதேச மக்கள் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.





ஆற்றின் கரையோரத்தில் பல வருடகாலமாக வளர்ந்துள்ள சில மரங்களின் வேர்களினால் ஜயகங்கை தடுப்பணையில் அரிப்பு ஏற்படுவதற்கு காரணமாக அமைந்ததுள்ளதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்படி ஆற்றின் இருபுறமும் உள்ள அபாயகரமான பகுதிகளை பிரதேச மக்கள் பிரதி அமைச்சரிடம் காண்பித்ததையடுத்து அதிக ஆபத்துக்கள் உள்ள மரங்களை அகற்றி ஜயகங்கை தடுப்பணையை சீரமைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மகாவலி அதிகாரிகளுக்கு பிரதி அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர்...

சுமார் 20 வருடங்களாக ஜயகங்கை தடுப்பணைகள் முழுமையாக பாதுகாக்கப்படாமலும் பராமரிக்கப்படாமலும் இருப்பதால் சில இடங்களில் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளதால் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளதாக தலாவ பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பிரதேச மக்கள் எழுத்து மூலம் தெரிவித்ததையடுத்து கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதுடன் விவசாயிகளுக்கும் பிரதேச மக்களும் பாதிப்பு ஏற்படாத வகையில் ஜயகங்கை தடுப்பணை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

# தெஹிவளை பாடசாலை விவகாரம்!

# பூரண அரச அங்கீகாரம் இருந்தும் அநீதிக்கு துணை போனது யார்?




**பேருவளை ஹில்மி**

1957 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீலாது சங்கமாக பல சமூக சேவைகளை செய்து கொண்டிருந்த இலக்கம் 9 மூவர் வீதியில் அமைந்திருந்த இடம், பிரதேச மக்களின் தேவையை கருதி மீலாத் முஸ்லிம் வித்தியாலயம் என்னும் பெயருடைய பாடசாலையாக மாற்றப்பட்டது.

சுமார் 10 க்கும் குறைவான மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் ஆரம்பம், காலம் செல்லச் செல்ல தெஹிவலை பகுதியை நோக்கிய முஸ்லிம்களின் அதிகரித்த குடியேற்றம் காரணமாக மாணவர்கள் தொகை அதிகரித்தது. தற்போது இங்கு படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 600 பேராகும்.

கடும் இடப்பிரச்சினை காரணமாக அண்மைக் காலப்பகுதியில் ஒரு தனவந்தர், தனிக்கட்டடமாக இருந்த இப்பாடசாலையை மூன்று மாடிக் கட்டிடமாக கட்டிக் கொடுத்த போதிலும், மாணவர்களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காததாக உள்ளது.

இந்தப் பாடசாலையில் கொள்ளக்கூடிய மாணவர்களின் அளவு தற்போது 400 பேர்களாகும். சுமார் 200 மாணவர்கள் வெளியிலும் வாகன தரிப்பிடங்களிலும், பாடசாலையின் ஓரங்களிலும் கொட்டைகளை விரித்தவர்களாக கல்வி கற்று வருகின்றனர். வெயில் காலங்களில் ஓரளவு சமாளித்த போதிலும் மழை காலங்களில் ஈடு கொடுக்க முடியவில்லை.

நிலைமை இவ்வாறு இருக்க, இப்பகுதி மக்கள் பாடசாலையின்றி படும் இன்னல்களை கண்ட தெஹிவளை கவ்டான வீதியில் வசிக்கும் பொறியியலாளர் நஸ்ருதீன் அவர்கள் பிரபல வர்த்தகர் ஒருவரிடம் நிலைமையை விளக்கிச் சொல்லவே, அந்த வர்த்தகர் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க அவர்களிடத்தில் விடயங்களை எடுத்துறைத்தார்.

அப்போதைய ஜனாதிபதி அவர்கள் கல்வி அமைச்சருக்கு அறிவித்து, பாடசாலை ஒன்றை அமைக்க கல்வி அமைச்சிடம் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக, தெஹிவலை பிரதேசத்தில் நீண்ட காலமாக மாணவர்கள் இன்றி மூடப்பட்டிருந்த ஸ்ரீ சுமக வித்யாலயத்தை மீலாத் முஸ்லிம் வித்யாலயத்துக்கு கையளிக்க முன்னைய கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுத்தார் .

இடையில் ஏற்பட்ட தேர்தல் காரணமாக குறிப்பிட்ட வேலைகள் இடைநிறுத்தப்பட்ட போதும், புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்பு பொறியியலாளர் அவர்கள், மேல்மாகன ஆளுநரிடம் விடயத்தை எடுத்துக்கூறவே அவரும் அவசர அவசரமாக செயல்பட்டு இடைநிறுத்தப்பட்ட வேலைகளை தொடர்ந்து முடிவு செய்து, இப்பாடசாலையை மீலாது முஸ்லிம் வித்யாலயத்திடம் கையளிக்க சட்டபூர்வமாக ஏற்பாடு செய்தார்.

பாடசாலை கிடைத்ததை தொடர்ந்து மேலதிக வேலைகளில் தெஹிவளை அழளஙரநள கநனநசயவழைெ (பள்ளிச் சங்க) அமைப்பும் இணைந்து கொண்டது.

இந்நிலையில் பாடசாலையை ஆரம்பிப்பதற்கு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி பாடசாலையைத் திறக்க முடிவு செய்யப்பட்டது.

பாடசாலை தொடக்கத்தை எந்தவித ஆரவாரங்களும் இன்றி இரகசியமாக ஆரம்பிப்பது என பலர் ஆலோசனைகள் கூறப்பட்ட போதிலும், பள்ளிச் சங்கத்தின் சில உறுப்பினர்களும், சில பெற்றோர்களும் இணைந்து பணத்தை வசூலித்து சுமார் 27 லட்சங்களை பாடசாலைக்கு வர்ணம் தீட்டுதல் உட்பட பல செலவுகளைச் செய்தனர்.

இதனால் பாடசாலை திருத்தி அமைக்கப்படுவதை அறிந்து கொண்ட பக்கத்து விகாரையின் தேரர் அவர்கள், இதற்கு எதிராக தனது செயல்பாட்டை ஆரம்பித்தார். ஏற்கனவே ஞானசார தேரர் அவர்களுடன் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த இவருக்கு இவ்விடயம் ஒரு அதிர்ஷ்டவசமாக அமைந்தது.

### பாடசாலையை ஒரு முஸ்லிம் பாடசாலைக்கு வழங்கக் கூடாது

மூடப்பட்ட பாடசாலையை ஒரு முஸ்லிம் பாடசாலைக்கு வழங்கக் கூடாது என்பதே இவரது போராட்டமாகும். இவ்விடத்தை பல வருடங்களுக்கு முதல் ஒரு பௌத்த தொண்டு நிறுவனம் பாடசாலைக்கு வழங்கி இருந்தாலும், எக்காலம் சென்றாலும் இது ஒரு பாடசாலைக்கே வழங்கப்பட வேண்டும் என்பது இதை வழங்கியவர்களின் கோரிக்கையாகும். அதனால் இவரது போராட்டம் தோல்வியுற்றது.

வழங்கியவர்கள் ஒப்பந்தத்தில் இந்த இடத்தில் ஒரு பாடசாலை மட்டுமே அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளதால், அது பௌத்த பாடசாலை என்றோ, முஸ்லிம் பாடசாலை என்றோ, கிறிஸ்தவ பாடசாலை என்றோ குறிப்பிடப்படவில்லை. அதனால் இவரது முயற்சி அதிகாரபூர்வமாக, சட்டப்படி தோல்வியடைந்தது.

இவர் இதை நிறுத்த பல இடங்களுக்குச் சென்ற போதிலும், இவரது வாதம் எடுபடவில்லை. நாம் இதை பாடசாலைக்கு வழங்கி இருக்கிறோம். பாடசாலைக்கு வழங்கும் அதிகாரம் கல்வி அமைச்சுக்கு உண்டு, அடுத்தபடியாக அரசாங்கத்திற்கு அன்பளிப்புச் செய்த ஒரு பொருளை திருப்பி எடுக்க முடியாது. அதன் அதிகாரம் அரசாங்கத்திற்கே உண்டு என்ற நிபந்தனையின் கீழ் இவருக்கு அரச தரப்பில் இருந்து பதிலளிக்கப்பட்டது.

குறிப்பிட்ட தேரரின் அச்சுறுத்தல் இருந்ததனால் போலீஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு செய்து விட்டு பாடசாலை ஆரம்பிக்க வேண்டுமென நல்லுள்ளம் படைத்தவர்கள், இதற்காக உழைத்தவர்கள், சட்டத்தரணிகள் அதிபருக்கு ஆலோசனை கூறிய போதிலும், அதிபர் இதில் சூட்சகமாக பின்வாங்கினார்.

இருந்தாலும் இது சம்பந்தமாக தெஹிவளை போலீசாரை தொடர்பு கொண்டு விடயங்களை அறிவித்த போது, பாடசாலைக்கும் பிள்ளைகளுக்கும் தாம் பாதுகாப்பளிப்பதாகவும், தேரர் அவர்களுக்கு அரச தீர்மானத்திற்கு மேலாக செயல்பட முடியாது எனவும். பாடசாலையை ஆரம்பிக்கும்படியும் போலீசார் தெரிவித்தனர்.

மேலும் இதுசம்பந்தமாக பிலியந்தலை வளையக் கல்விப் பணிப்பாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர், " கல்விக் காரியாலயம் , அமைச்சு போன்றவை சட்டத்திற்கு அமையவாக பாடசாலையை உங்களுக்கு வழங்கியுள்ளது. இதன் பிறகு உங்கள் அதிபரின் கைகளிலே தங்கி உள்ளது" என கூறி விட்டார்.

மேலும் இப்பிரச்சினையை அறிந்து கொண்ட முஸ்லிம் சமூகத்தின் முக்கிய சட்டத்தரணிகள் பலர், அரச தீர்மானத்திற்கு எதிராக தேரர் அவர்களுக்கு செயல்பட முடியாது எனவும், பின் வாங்காமல் பாடசாலையை ஆரம்பிக்கும்படியும், இது சம்பந்தமாக நீதிமன்றம் என வரும்போது தாம் இலவசமாக, சமூக நலனுக்கான முன்வர தயாராக இருப்பதாகவும் பின்வாங்க வேண்டாம் எனவும், போலீஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டை செய்துவிட்டு பாடசாலையை ஆரம்பிக்கும்படியும் ஆலோசனை கூறினார்கள்.

மேலும் இக்குறிப்பிட்ட தேரர் தற்போது நீதிமன்ற பிணையில் இருப்பதும் குறிப்படத்தக்கதாகும்.

ஆனால், பாடசாலையை ஆரம்பிப்பதற்கான எந்தவித முனைப்பையும் காட்டாத அதிபர் அவர்கள், பொலிஸ் நிலையம் செல்லவும் மறுத்தார்.

மேலும் இது சம்பந்தமாக அதிபர் என்ற வகையில் நிலமைகளை விளக்கி பாதுகாப்புத் தரும்படி IGP, DIG போன்றவர்களுக்கு கடிதம் ஒன்றை தருமாறும் நாம் நேரில் சென்று அதை கையளிக்கின்றோம் எனக் கூறிய போதும் அவர் அதற்கு இணங்கவில்லை.

இந்நிலையில் ஐந்தாம் திகதி பாடசாலையை ஆரம்பிக்க இருந்ததனால், கல்கிசை வடரப்பொல பள்ளிவாசலில் இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று 4 ஆம் திகதி இடம்பெற்றது. இக்கூட்டத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் முனீர் முலகபர் அவர்களும், பிரதி சபாநாயகர் னுச. ரிஸ்வி சாலி அவர்களும் பெற்றோர்களும், பள்ளிச் சங்க உறுப்பினர்களும் (ஆழளஙரநள கநனநசயவழைெ) கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களும், பெற்றோர்களும் பாடசாலையை ஆரம்பிக்கும்படியும், நாம் பின்வாங்க வேண்டிய அவசியம் இல்லை எனவும், தாம் போலீஸ் பாதுகாப்பை பெற்று தருவதாகவும் வலியுறுத்தினர்.

ஆனால் இதற்கு மாறாக அதிபரும் பள்ளிச் சங்கத்தின் சில உறுப்பினர்களும் காரணமின்றி இதை மறுத்தனர். இனவாதிகள் கல் எறிவார்கள், இப்பகுதியில் பிரச்சனை ஒன்றை ஏற்படுத்த இது வாய்ப்பாக அமையும் என சில அர்த்தமற்ற எதிர்வாதங்களை முன் வைத்து பாடசாலை ஆரம்பிப்பதை தடுத்து நிறுத்தினர்.

### கோழைத்தனத்தால் பாடசாலை ஆரம்பிப்பது கைவிடப்பட்டது

இறுதியில் இவர்களின் கோழைத்தனத்தால் பாடசாலை ஆரம்பிப்பது கைவிடப்பட்டது. இதைத் தொடர்ந்து அதிபர் அவர்களும் சில பள்ளிச் சங்க உறுப்பினர்களின் தாளத்திற்கு ஆட்டம் போட ஆரம்பித்தார்.

கல்வி அமைச்சு, பிலியந்தலை கல்விக் காரியாலயம் உத்தியோபூர்வமாக, சட்ட திட்டங்களுக்கு அமைவாக பாடசாலையை பொறுப்பாளித்த நிலையில், அரசியல் தலைமைகள் பாடசாலையை ஆரம்பியுங்கள் நாம் பின்வாங்கிய வேண்டியதில்லை எனக் கூறும் போதும், போலீசார் நாம் பாதுகாப்பு தருகிறோம் எனக் கூறும் போதும், சமூகத்தில் உள்ள தலைமை சட்டத்தரணிகள் பின் வாங்க வேண்டாம், சட்டப்படி அதிகாரப்படி உங்களிடம் தரப்பட்டுள்ளது. நாம் இதற்காக இலவசமாக வழக்காட தயாராக இருக்கின்றோம் என்ற நிலையிலும், பாடசாலையை ஆரம்பிப்பதற்கு பள்ளிச் சங்கத்தில் சில உறுப்பினர்களும் அதிபரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட சட்டபூர்வமான அதிகாரத்தின் படி தன் கடமையைச் செய்யாமல் பின்வாங்கியதன் பின்னணி என்ன ?

இது சம்பந்தமாக அதிபர் அவர்களை தொடர்பு கொண்டு, நிலமை இவ்வளவு நம்பக்கம் சாதகமாக இருக்கும்போது, ஏன் பாடசாலையை ஆரம்பிக்கவில்லை என நான் வினவிய போது "பாடசாலையை ஆரம்பிக பள்ளிச் சங்கம் விரும்பாமையினால் நாம் அதைப்பற்றி யோசித்து முடிவு செய்யவுள்ளோம்" எனத் தெரிவித்தார்.

அவ்வாறானால், பாடசாலை அதிபர் பாடசாலையை நடாத்திச் செல்வது பள்ளிச் சங்கம் கூறும் வகையிலா, அல்லது கல்வி அமைச்சின், கல்விக் காரியாலயத்தின் வழிகாட்டல், சட்டதிட்டங்களுக்கு அமைவாகவா என்பதை இவர் சமூகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

இந்த நாட்டில் ஆரம்பம் முதல் சில இனவாதிகள் அவ்வப்போது தலை எடுக்கின்றனர். இதற்காக அஞ்சி கோழைகளாக ஒதுங்கிச் செல்வதா ? சட்டதிட்டங்களுக்கு அமைவாக, சட்ட நடவடிக்கைகளை எடுத்து எமது உரிமையை பெற்றுக்கொள்வதா ?

கடந்த காலங்களில் இதே தேரர் பக்கத்தில் உள்ள பாபக்கர் பள்ளி வாசல், பதிவு செய்யப்படாதது என்றும், அதை மூட வேண்டும் என்றும் பெரியளவில் ஆர்ப்பாட்டம் செய்தார். போராட்டம் நடத்தினார் அது மூடப்பட்டதா ?

நழீமியாவை மூடும் படி நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள், அதை மூடி விட்டார்களா ? மதரஸாக்களை மூடும் படி முழு நாட்டில் உள்ள இனவாதிகளும் ஒன்று சேர்ந்து கொக்கரித்தார்கள் மதரஸ ாக்களை மூடிவிட்டார்களா ? காதி நீதிமன்றங்களை மூடும்படி ஆர்ப்பாட்டம் செய்தார்கள், அதனை மூடி விட்டோமா. தலைக்கு மீறி ஆர்ப்பாட்டங்களும் கூட்டங்களும் நடத்தினார்கள். இவை அத்தனையும் மூடப்பட்டு விட்டதா ?

முழு சமூகத்தையும் தலைகுனிய வைத்து, பின் வாங்கியது முறைதானா?

ஒரு இனவாதி கொக்கரித்தார் என்பதற்காக, பள்ளி சங்கத்தின் சிலரும் அவர்களுடன் அதிபரும் சேர்ந்து முழு சமூகத்தையும் தலைகுனிய வைத்து, பின் வாங்கியது முறைதானா? இதன் பின்னணி என்ன ?

ஏனைய இன மக்களை போல் நாமும் இந்த நாட்டுப் பிரஜைகள். எமக்கும் கல்வி கற்கும் உறிமை , மற்றும் மத உரிமைகள் உண்டு. ஒரு இனவாதி கொக்கரித்தார் என்பதற்காக அவருக்குப் பயந்து நமது உரிமைகளை லஞ்சமாக கொடுப்பதா ?

இந்த நாட்டில் நாம் வாழ்வதற்கு எமது எந்த உரிமைகளையும் எந்த இனவாதிக்கும் லஞ்சமாக கொடுக்க வேண்டியதில்லை. இந்த நாட்டில் சகலருக்கும் சகல உரிமைகளும் இருக்கின்றன என்பதை இவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவர்கள் கோழைத்தனமாக பின் வாங்கியது இலங்கையின் முழு முஸ்லிம் சமூகத்தையும் தலை குனியச் செய்ததோடு, இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை நடத்தி ஏனைய இனங்களின் உரிமைகளை நசுக்கி விடலாம் என்ற ஒரு படிப்பினையையும் இது போன்ற இனவாதிகளுக்கு இவர்கள் கற்றுக் கொடுத்து விட்டார்கள் என்பதை இவர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

இன்று தெஹிவளைப் பகுதியில் சுமார் 15 க்கும் மேற்பட்ட தனியார் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. தெஹிவளை பகுதியில் தனியார் பாடசாலைகள் உள்ளது போல், இலங்கையின் எப்பகுதியிலும் தனியார் பாடசாலைகள் இல்லை.

தெஹிவளைப் பகுதியில் இன்று முதலாளிமார்களுக்கான சிறந்த முதலீடு தனியார் பாடசாலை நிறுவுவதாகும். ஒவ்வொரு பாடசாலைகளிலும் சுமார்500 க்கும் 1000 த்திற்கும் இடைப்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர். இப்பகுதியில் சுமார் பத்தாயிரம் மாணவர்கள் அளவில் பாடசாலைகள் இன்றி தனியார் பாடசாலைகளுக்கு செல்கின்றனர்.

தெஹிவளை தமிழ் வித்தியாலயம், நுகேகொடை தமிழ் வித்தியாலயம், பம்பலப்பிட்ட இந்துக்கல்லூரி, ராமநாதன் இந்து கல்லூரி, போன்ற பல தமிழ் பாடசாலைகள் இருந்த போதிலும், அங்கு முஸ்லிம் மாணவர்கள் ஒரு சிலவர்களைத்தவிர மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. காரணம் நாட்டின் முஸ்லிம் பாடசாலைகள் என ஒதுக்கப்பட்டுள்ளது என்ற வாதமே அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

அவர்கள் புறத்தில் இது நியாயமே. சுமார் பத்தாயிரம் மாணவர்களுக்கு பாடசாலை பற்றாக்குறையான நிலையில், இது பற்றி எம் சமூகம் இன்னும் கண்டுகொள்ளாது இருக்கின்றததுடன், கிடைத்த பாடசாலையையும் பறி கொடுக்கும் நிலையில் உள்ளது.

தெஹிவளை வெவள்ளவத்தை பகுதி அடங்கலாக ஒரு தமிழ் தனியார் இந்துப் பாடசாலை இல்லை. அவர்களுக்குத் தேவையான பாடசாலை வசதிகளை அந்த சமூகம் செய்து வைத்துள்ளது. எதிர்காலத்தில் பாடசாலைகளில் ஏற்படும் இட நெருக்கடியை தவிர்க்க பல பெரிய காணிகளையும் தற்போது கொள்வனவு செய்து வைத்துள்ளனர்.

முஸ்லிம்கள் செறிந்து வாழும் இப்பகுதிகளில் சுமார் பத்தாயிரம் மாணவர்களுக்கு பாடசாலை பற்றாக்குறை எவர் கண்களுக்கும் தெரியவில்லை. முஸ்லிம் பாடசாலை ஒன்றை ஆரம்பிப்பது எவ்வாறானாலும் சட்டப்படி கிடைத்த பாடசாலையையும் காப்பாற்றிக் கொள்ளத் தெரியாத, இனவாதிகளுக்கு பயந்த கோழைகளாக எம் சமூகம் மாறி இருப்பது கவலைக்குறிய விடயமாகும்.

### தனியார் பாடசாலைகளுக்கு ஆதரவாக செய்யப்படும் சதித்திட்டமா ?

இந்நிலையில் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள், கல்வி அமைச்சு, பிலியந்தலை கல்விக்காரியாலயம் , போலீஸ் பிரிவு, மற்றும் முதல் நிலையில் உள்ள முஸ்லிம் சட்டத்தரணிகள் பாடசாலையின் பக்கம் சாதகமாக உள்ள நிலையில், எந்தவிதமான ஏற்றுக்கொள்ளக்கூடிய சாதாரண காரணங்களும் இன்றி, பள்ளிச் சங்க உறுப்பினர்களும் அதிபரும் ஒன்றிணைந்து இவ்விடயத்தில் பின் வாங்கியது கோழைத்தனமா ? அல்லது தனியார் பாடசாலைகளுக்கு ஆதரவாக

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான 77வது ஊடக திறன் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை







(அஷ்ரப் ஏ சமத்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் பாடசாலை ஊடக கழக மாணவர்களுக்கான 77வது ஊடக திறன் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை ஞாயிற்றுக்கிழமை (09) கொழும்பு, அல்ஹிதாயா பாடசாலையின் எம்.சி பஹார்டீன், மண்டபத்தில் நடைபெற்றது.

மீடியா போரத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் அல்ஹாஜ் என்.எம்.அமீன் தலைமையில் நடைபெற்ற

இந்த ஊடகப் பயிற்சி பட்டறையை மீடியா போரத்தின் தேசிய அமைப்பாளர் இர்சாத் ஏ காதர் , பொதுச் செயலாளர் ஸாதிக் ஷிஹான் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சி பட்டறையின் வளவாளர்களாவிடியல் இணைய தள பிரதம ஆசிரியர் ரிப்தி அலி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் செய்தி ஆசிரியர் ஜூனைத் எம் ஹாரிஸ் கெப்பிட்டல் தனியார் ஊடக வலையமைப்பின் பொது முகாமையாளர் ஷியா உல் ஹசன், அரசாங்க தகவல் திணைக்களத்தின் தகவல் அதிகாரி எம் பவாஸ் ஆகியோர்கள் கலந்து கொண்டு நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடு, சமூக ஊடகங்களை பாதுகாப்பான முறையில் கையாளுதல் போன்ற பயிற்சிகளை வழங்கினார்கள்.

கொழும்பு, அல் ஹிக்மா கல்லூரி, அல் ஹிதாயா கல்லூரி, தெமட்டகொடை கைரியா முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளிலிருந்து



ஊடகத்துறை கற்கைகளை கற்கும் 100 ச மாணவிகள் கலந்து கொண்டனர்.

பிற்பகல் சான்றிதழ் வழங்கு வைபவத்தில் பிரதம அதிதிகளாக மலேசியா உயர்ஸ்தானிகர் ஆலயத்தின் கொன்ஸியுலர் மொஹமட் டுமிங், இந்திய உயர் ஸ்தானிகர் ஆலயத்தின் முதல் செயலாளர் (ஊடகம், தகவல், கலாச்சாரம் ) திருமதி நாவ்யா சிங்லா, ஆகியோருடன், கௌரவ அதிதிகளாக முஸ்லிம் மீடியா போரத்தின் நலன் விரும்பி சபை உறுப்பினர்களான பிரபல தொழிலதிபர் சமூக தீபம் எம். சி.பஹார்டீன், சர்வதேச மனித உரிமைகள் குலோபல் மிஷனின் தவிசாளர் எம்.ஏ.சி. மஹ்ரூம், மற்றும் விசேட அதிதிகளாக அல் ஹிதாயா கல்லூரியின் அதிபர் ஏ.எப் ஸரூனா ஆமித், அல்ஹிக்மா பாடசாலையின் அதிபர் எம் எம் எம் ஹூஸைன் மற்றும் பி.எம்.ஐ.ரி கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி பர்சாத் ஜமால் ஆகியோர்களுடன் ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது.




# உயிருக்குச் சமனான வாசிப்பின் நேசிப்பு

வாசிப்பு எப்பொழுதும் உயிருக்கு நிகராக கருதப்பட வேண்டும். ஏனெனில் வாசிப்பு தான் மனிதனை வாழ வைக்கிறது. மனிதனை வாழ வைக்கக்கூடிய வாசிப்பை அவன் தான் நேசிக்க வேண்டும். வசிப்பால் மனிதன் வாழ்கிறான் வளர்கிறான். மனிதனால் வாசிப்பின் மூலம் அறிவும் சிந்தனையும் கருத்துக்களும் பரவுகின்றன.

புத்தகங்களை நேசிப்பது வணக்கமாக கருதப்பட வேண்டும். ஏனெனில் அது நேரத்தை பயனுள்ள வழியில் கழிப்பதற்கு மனிதனுக்கு துணை நிற்கிறது.

புத்தகங்களோடு வாழ்வதை எல்லோராலும் ஜீரணித்துக் கொள்ள முடியாது புத்தகங்களோடு வாழ்வது வாசிப்போடு வாழ்வை அமைத்துக் கொள்வதே மிகச் சுவையான ஒரு விடயம். அதனை அனுபவித்து பருகியவர்களால் மட்டுமே அதனுடைய கனதியை சுவையைப் புரிந்து கொள்ள முடியும்.

நிரந்தர தர்மம் என்ற வகையில் பயன் தரக்கூடிய நன்மை உயர்ந்த வணக்கமாக வாசிப்பு கருதப்படுகிறது. அந்த வகையில் ஒரு கருத்தை சிந்தனையாக புத்தகமாக எழுதுவது போலவே அதனை வாசிப்பதும் நிரந்தர தர்மமாக பயனுள்ளதாக அமைகிறது. ஏனெனில் எழுதப்பட்ட நூலின் கருத்துக்களை வாசிப்பதன் வழியாக மட்டுமே வெளி உலகத்திற்கு கொண்டுவர முடியும்.

புத்தகத்தை எழுதியவர் செய்த நன்மையைக் கூட வெளி உலகத்திற்கு வாசகர்களுக்கு கொண்டு வந்து பரவலாக்கம் செய்யக்கூடிய காத்திரமான பணியை வாசகன் தான் செய்கிறான்.

ஜாமிஉல் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆனை ஒன்று திரட்டியவர் என்ற சிறப்பை பெற்ற மூன்றாம் கலீபா உஸ்மான் ரலியல்லா/ஹ அன்/ஹ அவர்கள் செய்த மிகப்பெரிய தர்மம் அல்குர்ஆனை மீளவும் ஒன்று திரட்டி வாசிப்பதற்காக கொடுத்தது தான்.

அதேபோல வாசிப்பை பரவலாக்குவதற்காக புத்தகங்களை எழுதுவது, எழுதிய புத்தகங்களை வாங்கி விநியோகிப்பது, வாங்கிய புத்தகங்களை பரிசளிப்பது, அவற்றை வாசிப்பது, நூலகங்களுக்கு அன்பளிப்பு செய்வது, மற்றும் நூலகங்களை கட்டிக் கொடுப்பது இப்படி புத்தகத்தோடு தொடர்பான, வாசிப்போடு தொடர்பான பல்வேறு விடயங்களை இஸ்லாமிய ரீதியில் நோக்கினால் இவை அனைத்தும் மிகப் பெரும் தர்மமாக மாத்திரம் அமையாமல் நிரந்தர தர்மமாக, உலக வாழ்விலும் மரணத்தின் பிறகும் தொடர்ந்து, மண்ணறையை ஒளியூட்டக்கூடிய தன்மை வாய்ந்ததாக இருக்கும் என்பதனை இஸ்லாம் எங்களுக்கு கற்றுத் தருகிறது.

அல்குர்ஆனை பாதுகாப்பாக எழுதியவர்களை குத்தாமல் என அழைக்கின்றோம். இன்று வரை ஓதப்படக் கூடிய அல்குர்ஆன் மூலம் அவர்களுக்கு தொடர்ந்து நன்மைகள் சென்று கொண்டே இருக்கும் அதேபோலத்தான் பயனுள்ள புத்தகங்களை எழுதுவது, எழுதக்கூடியவர்களை தூண்டுவது, வாசிப்பது, வாசிக்க தூண்டுவது, வாங்கிக் கொடுப்பது போன்ற அனைத்தும் உயிர் வாழ்வோடு தொடர்பான ஒரு விடயமாகவே கருதப்பட வேண்டும்.

இந்த எல்லா சிறப்பையும் உணர்த்தி விடுவதற்காக தான், குர்ஆனை வாழ்வின் மீது தொடர்பு பட்ட ஒன்றாக இறக்கி, படைத்த இறைவனின் பெயரைக் கொண்டு வாசிப்பீராக என்று கட்டளையிட்டு அந்த குர்ஆனை ஆரம்பிக்கின்றான்.

உயிர் மூச்சு உள்ளவரை தான் மனித வாழ்வு இந்த பூமியிலே அர்த்தப்படுகிறது. அதேபோலத்தான் உயிர் மூச்சு உள்ளவரை வாசிப்போமாக இருந்தால், அது திட்டமிடப்பட்ட முறைப்படுத்தப்பட்ட வாசிப்பாக இருக்குமாயின் அந்த அறிவானது உலகிலும் மறுமையிலும் பயன்படக்கூடியதாக இருக்கும். அதைப்போல வாழ்க்கைக்கு பெறுமானம் சேர்க்கக் கூடியதாக இருக்கும். முன்மாதிரி மிக்க வாழ்வாக எமது வாழ்வை அமைத்து விடக் கூடியதாக இருக்கும்.

சுற்றுச்சூழலை அடுத்தவர்களுக்கு பயன் தரக்கூடியதாக அமைத்துக்கொள்ள வாசிப்பு அதீத பங்களிப்பு செய்கின்றது. நமது வாழ்வுக்கு பெறுமானம் சேர்த்து வாழ்வை ஒழுங்குப்படுத்தி முறைப்படுத்தி முன்னேற்றிச் செல்வதற்கு வாசிப்பு துணை நிற்கிறது.

இதனால் தான் வாழ்வுக்கு எந்த அளவு தூரம் முன்னுரிமை கொடுக்கின்றோமோ அதை அளவு தூரம் வாசிப்புக்கும் நாங்கள் முன்னுரிமை கொடுக்கின்ற பொழுது அது இரட்டிப்புப் பெறுமானம் கொண்டதாக மாறிவிடுகிறது.

அல்குர்ஆனாகிய இறைவனின் வார்த்தைகளை மொழிகின்ற பொழுது இறைவன் ஒவ்வொரு வார்த்தைக்கும் எண்ணிலடங்கா நன்மைகளையும் வழங்குகின்றான்.

முதலில் அவனுடைய வாழ்க்கையை சீரமைக்க அதை துணை நிற்கின்றது என்பதனால் கருத்தூண்டி வாசிப்பதற்காக இறைவன் இந்த சிறப்பு ஏற்பாட்டை செய்திருக்கின்றான். வாசிக்க முடியாதவன் கூட கஷ்டப்பட்டு சிரமப்பட்டு முயற்சி செய்து வாசித்தால் அவனுக்கு இரண்டு நன்மைகளை கொடுக்கின்றான்.

அப்படியாயின் அவனால் ஜீரணித்துக்கொள்ள முடியுமான அவனுடைய முதல் மொழியில் வாசித்து அவனுடைய வாழ்க்கையை ஒழுங்கமைத்து அதன் வழியாக முன்மாதிரி மிக்க ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு பிறரும் பலனடையும் வகையில் தன்னுடைய வாழ்வை கொண்டு செல்பவனுக்கு இறைவன் எண்ணற்ற நன்மைகளை நிச்சயம் வழங்க வேண்டும் என்பது இயல்பாக ஏற்றுக் கொண்டே ஆக வேண்டிய பேருண்மை ஆகும்.

இந்த வகையில் நோக்கினால் எங்களுடைய உயிர் மூச்சுக்கு எந்த அளவு பெறுமதி இருக்கின்றதோ அதுதான் வாழ்க்கைக்கு பெறுமதியை சேர்க்கின்றது. வாழ்க்கைக்கு பெறுமதி சேர்க்கக் கூடியதாக வாசிப்பு அமையும் பட்சத்தில் வாழ்வு இரட்டிப்பாக மாறுகிறது.






நாச்சியாதீவு பர்வீன்

# ஜமீலின் “காலம் ஒரு வேட்டை விலங்கு”

## காலத்தில் ஏற்றி வாசிக்கப்படும் கவிதைகள்

- அப்துல் ரசாக் -

இன்றைய ஈழத்துக் கவிஞர்களுள் ஜமீல் தவிர்க்கவியலாதவர். தொடர்ச்சியாக எழுதுவதே அவரது பலம். ஒரு கவிஞன் எழுதி எழுதித்தான் தான் விரும்பும் கவிதையுலகத்தைக் கண்டடைய முடியும் என்பதில் அவருக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. அந்தவகையில் பதினொரு கவிதை நூல்களை வெளிக்கொணர்ந்த அவரது அசாத்திய திறமையை முதலில் நாம் பாராட்டியாக வேண்டும்.

காலத்தை வேட்டை விலங்குக்கு ஒப்பிட்டும் உருவகப் படுத்தியும் "காலம் ஒரு வேட்டை விலங்கு" எனும் புதிய கவிதை நூலை ஜமீல் தந்திருக்கிறார். காலத்தின் மீதேற்றி கவிதைகளை வாசிப்புச் செய்யும் கைங்கரியத்தை இக்கவிதைகள் வழியே ஜமீல் நிகழ்த்தவிருப்பதை இதன்மூலம் பூடகமாக அறிவிக்கவும் செய்கிறார்.

"காலத்தின் மீது சத்தியமாக" என்று அல் - குர்ஆன் அறிவிக்கிறது. நாம் வாழும் காலமும் கணமும் அந்தளவு பெறுமானமிக்கவை. இன்று காலத்தைத் தாண்டி வாழும் படைப்புக்களெல்லாம் பெரும்பாலும் அந்தந்தக் காலத்தை உட்செரித்து படைக்கப்பட்டவைதாம். இத்தகைய காலப் படைப்புக்களே பின்னர் யதார்த்த வாதமும் வரலாற்றுப் பார்வையும் உருவாகக் காரணமாகவிருந்தன.

ஜமீல், காலத்தில் வாழ்ந்து கொண்டு முன்னும் பின்னுமாக காலத்தை வேவு பார்க்கும் கவிதைக் கண் கொண்டவர். நுண்ணிய அதிர்வலைகள் மூலம் அவர் காலத்தை அசைத்துப் பார்க்கிறார். இதன் வெளிப்பாடான நிகழ்வுகளையே தன் கவிதைகளில் பதிவு செய்கிறார்.

தார்மீகக் கோபங்களுக்கும் காலத்திற்கு மிடையான முடிச்சை கவிஞன் இலகுவில் போட்டு விடுகிறான். இதுவே அவ்வப்போது அவனது பாடுபொருளாகி விடுகிறது.

எல்லாமே காலத்தில் நிகழ்வதால் காலம் ஜமீலுக்கு அகாலமாகிவிடுகிறது. இதே காலம்தான் ஒரு பூனை ரூபத்தில் அவரை வேட்டையாடி விடுகிறது.

”என் இரவுகளை
கதறக் கதற
வேட்டையாடும்
இந்தப் பூனைகளை
என்ன செய்வதென்று
புரியவில்லை”
(இரவுகளை வேட்டையாடும் பூனைகள்)

எனக் குறிப்பிடும் ஜமீல், இக்காலத்திலேதான் எதுவும் நிகழும் என்கிறார். அது இன்னொரு வகையில் காலத்தை நாம் வேட்டையாக வேண்டும் எனச் சொல்வது போலவும் இருக்கிறது.

”யாரிடமும் பூக்காமல்
யாரிடமும் மணக்காமல்
யாருக்கும் கனியாமல்
யாருக்கும் நிழல் விரிக்காமல்
அத்தனை இலகுவில் இவ்
வாழ்வைஸ
பூர்த்தி செய்ய முடியாது காண்”
(வாழ்வை எப்படி பூர்த்தி செய்வாய்)

குழந்தைகளையும் சிறுவர்களையும் தன் கவிதைகளுக்குள் கொணர்ந்தவர் என்கின்ற ரீதியில் அவரைப் பலரும் அணுகுவதுண்டு. இத்தொகுப்பிலும் அந்நீட்சியை ஜமீல் கொண்டிருக்கிறார். ஒரு மீட்பராக இல்லாமல் மனிதனாகப் பிரார்த்திக்கும் சாதாரண கவியுள்ளமே இவரிடமுண்டு. இதனால் இவர் எழுதும் குழந்தை மற்றும் சிறுவர் கவிதைகளில் ஆற்றுப்படுத்தும் அற்புதங்கள் நிகழ்ந்து விடுகின்றன.

”எத்தனை துளிகள்
கடலில் இருக்குமென்று
அவாவினாள் ஹயா

எத்தனை துளிகள்
இருக்கு
மென்று தெரியாது
ஆனால் ஒரு துளி
தான்
கட
லான
தென்
றேன்.

உடன்
கடலைப்
பார்த்து
எத்தனை
பெரிய துளியென்று
ஆச்சரியமடைந்தாள் ஹயா”
(கடலும் ஒரு துளிதான்)




“ஒன்றும் ஒன்றும் பெரிய ஒன்று“ எனும் வைக்கம் முகம்மது பஷீரின் தத்துவம், ஜமீலின் கவிதையில் இன்னொரு விதமாய் உருக்கொள்வதை நாம் காண்கிறோம். பெருங்கடலையே ஒரு துளியாய்க் கொள்வதன் ஆனந்தம் அளப்பரியது.

மிகச்சிறிய விடயங்களையும் அவதானிக்கும் கூருணர்வு ஜமீலிடம் அதிகமுமுண்டு. மழை, வானம், காற்று, கடல், பறவைகள், நிழல், ஓவியம் என நீளும் பட்டியலில் மனிதர்கள் வியந்தது போக மீதமுள்ள எச்சங்களை இவர் வியந்து விடுகிறார். இவ்வியப்பில் முன்னர் கிடைக்காத ஆழ்ந்த அனுபவங்களுக்குள் எம்மை அழைத்துச் செல்கிறார். “தனிமையில் பெய்யும் மழை“ எனும் கவிதையில்,

”பூச்சாண்டியை கண்டஞ்சிய
சிறுவனைப் போல்
மழையை ஒதுக்கிவிட்டு
தேநீர்க் கடைக்குள்
ஓடி ஒதுங்குகிறேன்

பேச்சுத் துணைக்கு யாருமற்று
தனிமையில் பெய்கிறது மழை”

என எழுதுகிறார். தனிமையில் பெய்யும் மழை நமக்குள் பெரியதொரு பாறாங்கல்லை ஏற்றிவிட்டதைப் போல கனக்கிறது. இத்தகைய உணர்வுச்சிக்கல்களில் இருந்து வாசகர்களையும் அவரது கவிதைகளையும் பிரித்தெடுப்பது சிரமமென்றே தோன்றுகிறது.

ஜமீலின் கவிதைகளில் மீந்திருப்பது “கருணை“ என்கின்ற காருண்யமாகும். இக்கருணைக் குழந்தையை தன் கையோடு அழைத்துக் கொண்டே ஜமீல் தன் கவிதைகளெங்கும் பயணிக்கிறார். உயர்திணைகளிலும் அஃறிணைகளிலும் இவர் தெளிக்கும் கருணை நீர் நதியாகிப் பிரவகிக்கிறது. கடலாகிப் பெருக்கெடுக்கிறது. “ஆயிஷா“, “சிறுமியின் கண்களில் பெருக்கெடுத்த கருணை“, “கைவிடப்பட்ட நாய்“, “கருணையின் நிறம்“, அப்பாக்களின் கால்கள்“ முதலிய கவிதைகளில் பேதமுற்று அலையும் கருணையின் நிறங்களை நாம் தரிசிக்கலாம்.

உண்மையைத் தேடும் தத்துவார்த்த தேடலை ஜமீலின் கவிதைகள் தொடக்கி வைக்கின்றன. அத்தனை கோடி முகங்கள் மத்தியிலும், “யாரிடம் இருக்கிறது முகம்?“ என இவரால் கேள்வியெழுப்ப முடிகிறது. “தன்னோடு வந்த நிழல் எங்கு சென்றிருக்கும்?“என விவின முடிகிறது.

வெயிலில் தகிக்கும் மனிதர்களுக்கு நிழலாக, தருவாகவும் தரிக்க இயலுகிறது.

“அறை“ எனும் கவிதை, அது பொதித்து வைத்திருக்கும் பூடகமான கவிதை சொல்லல் முறையினால் பட்டென நம்முகத்தில் அறைந்து விடுகிறது.

”பூட்டிய கதவின்
சாவியைத் தொலைத்துவிட்டேன்

இருக்கிற சாவிகளை
ஒவ்வொன்றாகப்
பிரயோகித்துப் பார்க்கிறேன்

ஒன்றும் பொருந்துவதாக இல்லை
பூட்டுக்கு புரையேறியதுதான்
மிச்சம்

சன்னல்கள் சாத்தப்பட்ட
நிலையில்
வெளிவர வேறு வழியின்றி
மூச்சுத் திணறுகிறது அறை”

இதுபோன்றே “உலகின் கதவு“, “காலத்தின் தூரிகையில் சிந்தும் ஜீவிதம்“, “கடலின் கதவு“, “ஓவியம் வரையும் மரம்“ என நீண்டு செல்லும் பல கவிதைகள் தொகுதியில் உண்டு.

கவிதையில் கதைசொல்லும் மொழி ஜமீலுக்கு வாலாயமாகியிருக்கிறது. இதனால் இவரது ஒவ்வொரு கவிதையையும் ஒவ்வோர் ஓவியமாகவும் தீட்டிவிட எம்மால் இயலும். அண்மைக்காலங்களில் ஜமீலுக்குள் ஒளிந்திருக்கும் சிறுகதையாளன் அடிக்கடி தலைதூக்கிப் பார்ப்பதும் இதனால்தான்.

உருவகம், படிமம், விவரணம் முதலிய மரபுரீதியான உத்திகளையும் ஜமீல் அவ்வப்போது தனது கவிதைகளில் பரிசோதனைக்குட்படுத்துகிறார். பின்நவீனத்துவ நிலவரங்களையும் கவிதைகளில் ஏற்றி வாசிக்கிறார். பூக்கோவையும் டெரிடாவையும் சந்திக்க வைக்கும் பிரயத்தனத்தை “பிரதினுள் வாழ்தல்“ எனும் கவிதை மூலம் சாத்தியமாக்க முனைகிறார்.

கவிதைகளை மொழிவதில் மீளமீளப் பயன்படுத்தும் ஒரேவிதமான உத்திகளை ஜமீல் சுய பரிசோதனைக்குட்படுத்தும்போது வாசகன் புதிய பிரதியின்பங்களைப் பெறலாம்.

ஜமீலின் கவிதைகளை நுணுகிப் பருகுவதன் மூலம் தற்கால கவிதைப் போக்கின் மீது இவர் பாய்ச்சும் ஒளியை நாம் கண்டுகொள்ளலாம். அவ்வொளியின் துணைகொண்டே ஜமீலின் இருப்பை உறுதி செய்யலாம்.

ஜமீலுக்கு எமது வாழ்த்துக்கள்.

## சாதி துலைத்து நிற்போம் சாதிக்கும் எண்ணம் எடுப்போம்

சாதி மத பேதமின்றி
சாதிக்கும் எண்ணத்துடன்,
கவி வரியாய் கணை தொடுக்க கையில் எடுத்தேன்
பேனையை.

இலங்கை எம் தீவில் இல்லத்துக்கு இல்லம்
இன மதம் கொண்ட போரை வென்று எடுப்போம் வாரீர்.

ஓர் சிலரின் கூற்று
அறிவிலிகள் போல் ஏற்று பிள்ளைகளின் மனப் பாட்டு
பாலாக்கும் கயவர் கூற்று.

அன்பால் வெல்லும் மனதை வன்பால் வெல்லலாமோ!
பிஞ்சி மனதில் நஞ்சை போட்டு அஞ்ச வைக்கலாமோ!
சிங்களம், தமிழ், முஸ்லிம் நாம் சிதறிவிட்ட சோகம் என்ன?
கோபம் அடக்கி வாழ்வாரே சிரிப்புடன் சிறப்பாய்
நிலைப்பாரே.

ஒரே கொடியை ஏந்தி ஒரே விதியை நம்பி ஒரே உதிரம்
ஓடும் உடம்பு கொண்டோர் நாம்.
மத பேதமின்றி மரண பீதியின்றி கைகளை இறுகப்
பிணைத்து புதிய தேசம் படைப்போம்.

சாதி துலைத்து நிற்போம் சாதிக்கும் எண்ணம் எடுப்போம்
மறை ஏரி பறை அடிப்போம் அனைவரும்
ஒரே மூச்சென்று....

இன நல்லிணக்கமும், மத ஒற்றுமையும் நிறைந்த அழகான
தேசமொன்றைக் கட்டியெழுப்ப அனைவரும் கரம்
சேர்வோம்.

**Clean Sri Lanka - 2025**

**கவிக்குயில் அகீல்,**
**அம்பேபுஸ்ஸ – வரகாபொல,**
**முதலாம் வருடம், நளீமியா கலாபீடம், பேருவளை.**

## சம்மாந்துறை மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்புக்கான உதவி



(றியாஸ்)

சம்மாந்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட பல பாடசாலைகளுக்கு கற்றல் ஊக்குவிப்புக்கான நிதி உதவியினை முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹீர் தலைமையில் அவரது குடும்ப உறுப்பினர்கள் வழங்கி வருகின்றனர்.

சம்மாந்துறை வளத்தாப்பிட்டி தாஹீரா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பல மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்புக்கான நிதியுதவி வழங்கி வைக்கும் நிகழ்வு அதிபர் ஏ.ஆர்.எம்.கலீல் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் மாஹீர் அவரது சகோதரி, ஓய்வு பெற்ற அதிபர் சரீனா முஹம்மத் மற்றும் சமூக செயற்பாட்டாளர் ஆஸீக் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.

இதேவேளை கடந்த காலங்களில் அதிகமான பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு இவ்வாறான நிதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும் 70

# தலைவர்கள் விடுகின்ற முக்கியமான ஒரு தவறு

ஒரு தலைவர் செய்யக்கூடிய மிகப்பெரிய தவறுகளில் ஒன்று அவர் தன் மக்களுடன் பயனுள்ள தகவல்தொடர்புக்கு முன்னுரிமை கொடுக்கத் தவறுவதாகும்.

தகவல்தொடர்பு வெவ்வேறு வடிவங்களில் வெளிவரலாம்.

தகவல் தொடர்பு...

– வார்த்தைகளாக,

– எழுத்துருவாக வெளிவரலாம்.

– ஊக்கம் உற்சாகம் கொடுப்பதன் மூலம் வெளிவரலாம்

– சில பொறுப்புகளை அல்லது பதவிகளை வழங்குவதன் மூலம் வெளிவரலாம்.

– மதிப்புகள் மற்றும் பாராட்டுக்கள் கொடுப்பதாக வெளிவரலாம்.

– மக்களின் விருப்பங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதன் மூலம் வெளிவரலாம்.

தலைவருக்கும் அவரை தலைவராக தெரிவு செய்த மக்களுக்கும் இடையில் இப்படி பல வடிவங்களில் தகவல் தொடர்புகள் நிகழ்கின்றன.

தலைவர் இந்த எளிய விடயத்தைப் புரிந்துகொண்டு அதை நிறைவேற்றத் தவறுகிறார் என்றால், அவர் தன் மக்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவில்லை என்று அர்த்தமாகிவிடும்.

மக்களின் இதயத் துடிப்பை அறிந்து, எதிர்பார்ப்புகளை புரிந்து அவர்களுடன் நல்ல முறையில் தொடர்பு கொள்ள தலைவர் தயாராக இருப்பது பொறுப்பு வாய்ந்த தலைவரின் பொறுப்பான கடமையாகும்.

தலைவராக இருந்து தன் மக்களுடன் ஒன்றாக பயணிக்கும் போது அவர் அங்கு,

– வெவ்வேறு சமூகங்களை அவர் சந்திக்க வேண்டி வரும்.

– வெவ்வேறு மொழிகள் பேசுபவர்களுடன் உறவு வைக்க வேண்டிவரும்.

– வெவ்வேறு மதங்களை பின்பற்றும் மக்களுடன் சகவாசம் மேற்கொள்ள வேண்டிவரும்.

– மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது இந்த அனைத்து அம்சங்களையும் மிகவும் கவனமாகக் கருத்தில் கொள்ள வேண்டியவராக தலைவர் இருக்கிறார்.

மக்களுடனான தலைவரின் தகவல்தொடர்பு பலவீனமாகவோ, குறைகள் கொண்டதாகவோ, குறிப்பிட்ட சிலரை சார்பானதாகவோ, இருந்தால் அங்கே

– முறிவுகள் உருவாக ஆரம்பிக்கலாம்.

– அவநம்பிக்கையும் நிச்சயமற்ற தன்மையும் ஏற்படலாம்.

– தவறான புரிதல்களுக்கு வழிவகுக்கலாம்.

– புறக்கணிப்புக்கு உள்ளான மனநிலை உருவாகலாம்.

– தலைவர் மீது அதிருப்தியும் அவநம்பிக்கையையும் ஏற்படலாம்.


இந்த நிலை வெற்றிப் பாதையில் பயணிக்க முயற்சிக்கும் தலைவர்களுக்கு மிகப்பெரிய முட்டுக்கட்டையாக அமையலாம்.

தலைவர் ஒரு வலிமையான தலைவராக இருப்பதை விட, அவர் தனது மக்களுடன் ஒரு நல்ல தொடர்பாளராக இருப்பது முக்கியமானது. அப்படி இருந்தால் மட்டுமே தன் மக்களுடனான அவரது பயணம் வெற்றிப் பயணமாக அமையும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

**பயாஸா பாஸில்**




# நன்றாக கவனித்துப் பாருங்கள்!

அவனுடைய எல்லா சிரிப்பிலும் ஏதோவொரு சிந்தனையும் கலந்தே இருக்கும். அதை அவனால் தாங்க முடியாத போது வெளிக்காட்டுவான். ஏனென்றால், நீங்கள் இதை நினைத்து வருந்தக்கூடாது. அத்தோடு, உடையக் கூடாது என்பதற்காக.

அவனுடைய எல்லா மகிழ்ச்சியிலும் ஏதோவொரு பரபரப்பு கலந்தே இருக்கும். அதை அந்த நேரத்தில் அல்லாது வேறொரு நேரத்தில் வெளிக்காட்டுவான். ஏனென்றால், நீங்களாவது இந்த மகிழ்ச்சியில் முழுமையாக நனைய வேண்டும் என்பதற்காக.

அவனுடைய எல்லா கவனிப்பிலும் உங்களை பாதுகாக்க வேண்டுமென்ற பயம் எப்போதும் கலந்திருக்கும். அது உங்களோடு கோபமாக இருந்தாலும், உங்களுக்கு தெரியாமல் உங்களுக்கே உரித்தான வேலியாகி பலத்த பாதுகாப்பை அளித்திடுவான்.

அவனுடைய எல்லா ஓட்டத்திலும் உங்களது உணர்வுகளில் உள்ள சீற்றத்தையும் சீராக்க வேண்டுமென்ற கருணையிருக்கும். நீங்கள் அவனை எப்படி நினைத்தாலும், உங்களது எல்லா உணர்வுகளையும் மதித்து நடக்க பெரும் முயற்சிகளை செய்வான்.

அவனுடைய எல்லா வேலைப்பாடுகளிலும் உங்களுக்கு நேரம் தந்து பேச வேண்டுமென்ற பெரு ஏக்கமிருக்கும். நீங்கள் அவனோடு இப்போதெல்லாம் இரக்கமே இல்லையென்று சண்டையிட்டாலும், உங்களது குழந்தைத்தனத்தை அறிந்த அவன் அமைதியாய் உங்களை அரவணைத்து நெற்றியில் முத்தமிடுவான்.

சிரிப்பிலிருக்கும் சிந்தனைக்கும் மகிழ்ச்சியிலிருக்கும் பரபரப்புக்குமுரிய காரணத்தை நான் சொல்லவில்லை இல்லையா? அவன்கள் அதனை அவள்களிடம் சொல்வதில்லை. அவன்களால் தாங்கி கொள்ள முடியாத தருணங்களில் அவளினுடைய மடி மீது சாய்ந்து கதை பேசுவான் பாரம் குறைந்தது போன்று உணர்வான் அவன்.

தனக்குள் நெருப்புக் குழம்பை வைத்துக்கொண்டு அவள்களுக்கு குளிர்ச்சியை மட்டும் கொடுக்கும் வல்லவர்கள். இவர்களையே சரிதம் சதாவும் ஆண் தேவதைகள் என்று சிலாகித்து பேசுகிறது.

அவன் என்பது உங்களது தந்தையாகவோ, கணவராகவோ, மகனாகவோ, எப்படியோ ஒரு மைந்தனாக இருக்கலாம். அவன்கள் இந்த உலகின் அழகிய ஆச்சரியங்கள். மீண்டும் சொல்கிறேன்,

நன்றாக கவனித்துப் பாருங்கள்!

– றஜா முஹம்மத் –

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) வெளிவருகின்ற **"உதயம்"** பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

## பூரண...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படும் சதித்திட்டமா என்பதை இவர்கள் சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும்.

இப்பாடசாலை முஸ்லிம் பாடசாலைக்காக சட்டபூர்வமாக, அரச அதிகாரப்படி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், ஆரம்பம் செய்வதற்கு திராணி இல்லாமல், இனவாதிகள் பாடசாலையை திறக்க விடுவதில்லை என சமூக வலைத்தளங்களில் ஒப்பாரி வைத்து ஓலமிடுவது ஒரு கோழைத்தனமான செயல் என்பதை இவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் தற்போது பாடசாலையை ஆரம்பிக்கவென மீலாத் முஸ்லிம் வித்யாலயத்திலிருந்த கதிரிகளையும் மேசைகளையும் புதிய பாடசாலைக்கு எடுத்துச் சென்றதால், மாணவ மாணவிகள் தரையில் பாய்களை விரித்து படிக்கின்றார்கள் என்பதும் ஒரு கவலைக்குரிய விடயமாகும். இது கோழைத்தனத்தால் வந்த வினையாகும். இத்தனைக்கும் அதிபரும் குறிப்பிட்ட பள்ளிச் சங்க உறுப்பினர்களுமே பதில் சொல்ல வேண்டும்.

இப்பாடசாலையை முஸ்லிம் பாடசாலை வழங்குவதற்குஎதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதில் ஊர் மக்கள் யாரும் இருக்கவில்லை. இப்பாடசாலையைச் சூழ ஓரிரு மாற்று மதத்தவர்களைத் தவிர அனைத்து முஸ்லிம் குடும்பங்களுமே வாழ்கின்றனர். இதிலும் இங்கு வாழும் ஓரிரு மாற்று மதத்தினரும் நல்ல பண்புள்ள மக்களாகவே காணப்படுகின்றனர். ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சில இனவாத அரசியல்வாதிகளால் வெளிப்பகுதிகளிலிருந்து கூலிக்காக அழைத்து வரப்பட்டவர்கள்.

இது சம்பந்தமாக உதவி செய்ய முன்வந்த சட்டத்தரணிகளை அணுகிய போது உறுதியற்ற அதிபருடன் இதை முன்னெடுத்துச் செல்வது முடியாத காரியம் எனவும், பாடசாலை என வரும்போது அதிபரின் முடிவே இறுதி தீர்மானம் எனவும், உறுதியற்ற அதிபருடன் இதில் இறங்குவது ஆபத்தானது என கூறிவிட்டனர்.

மேலும் இவர்கள்விட்ட காலதாமதமான பிழையினால், தற்போது பொலிஸாரும் சில அழுத்தங்கள் காரணமாக நெளிவு சுழிவுகளுக்கு உட்பட்டிருப்பதாகவும் அறிய கிடைத்தது.

இதுவரை பாடசாலை விடயத்தில் சட்டத்திற்கு சமாந்தரமாக செயல்பட்ட போலீசார், இரண்டு தினங்களுக்கு முன்னர் அதிபரையும், வளையக்கல்வி பணிப்பாளரையும், சர்ச்சைக்குரிய தேரரையும் பொலீஸ் நிலையத்திற்கு வரவழைத்து, பாடசாலையை திறக்க கூடாது என அச்சுறுத்தியதாகவும் அறியக் கிடைத்தது.

ஒரு பாடசாலை ஒன்றை திறக்கக் கூடாது என சொல்வதற்கு போலீசாருக்கு எந்த அதிகாரமும் இல்லை. அரச தீர்மானத்துக்கு எதிராக செயல்படும், அரச தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதை தடுப்பவர்களை பாதுகாப்பதும், பாடசாலை விடயத்தில் தேரரை வரவழைத்து பேச்சுவார்த்தை நடத்துவதும் அவர்களுக்கு ஆதரவாக செயல்படுவது போலிசாரின் காரியம் அல்ல என்பதை அங்கு சென்றவர்கள் எடுத்துக்காட்ட தவறியுள்ளனர்.

மேலும் பாடசாலைக்கு சம்பந்தம் இல்லாத தேரருடன் எந்தப் பேச்சுவார்த்தைகளுக்கும் இவர்கள் சென்றிருக்கக் கூடாது. இவ்விடயத்தில் கல்விக்காரியாலயம் பிழை செய்திருந்தால் இதை எதிர்ப்பவர்கள் காரியாலயத்துக்கு எதிராக நீதிமன்றம் சென்று சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர இவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது எமக்கு உரிய காரியம் அல்ல. இதை விடுத்து, தேரர் அரச கடமை செய்ய பங்கம் விளைவித்தார் என அதிபர் புஹார் செய்திருக்க வேண்டும்.

மேலும் இது சம்பந்தமாக முஸ்லிம் சட்டத்தரணிகளை அணுகியபோது, இது எமது அடிப்படை உரிமை பிரச்சனை என்றும், நீதிமன்றம் சென்று, நீதிமன்ற அனுமதியுடன் பாடசாலையை திறக்கலாம் என்றும் தெவித்தனர். எதற்கும் அதிபரின் ஆதரவு முக்கியமானதாகும்.

மேலும் புதிதாக கிடைத்த தகவல்களின் படி இன்னும் இரு வாரங்களில் நோன்பு விடுமுறைக்காக பாடசாலை மூடப்படுவதால், இரண்டு வாரங்கள் பொறுத்திருக்குமாறும் பின்னர் யோசிப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் தகவல் கிடைத்தது.

இப்பகுதியில் பாபக்கர் பள்ளிவாசல் பிரச்சனையின் போது, குறிப்பிட்ட இதே தேரர், பிரச்சினையாக உள்ளதால் பள்ளிவாசலை 10 நாட்களுக்கு மூடும் படியும் பின்னர் யோசிப்போம் என்றும் வாதாடினார். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் ஒரு வினாடி கூட மூடுவதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. அன்று பள்ளிவாசல் மூடப்பட்டு இருந்தால். இன்னும் பள்ளிவாசல் மூடப்பட்டிருக்கும்.

எனவே, இதே நிலை இப்பாடசாலைக்கும் ஏற்படும் என்பதை இவர்கள் இன்று எழுதி வைத்துக் கொள்ளட்டும்.

இப்பகுதியில் பாடசாலை இன்றி தனியார் பாடசாலைகளுக்குச் செல்லும் சில பெற்றோர், (தாய்மார்) வீட்டு வேலைகளுக்குச் சென்று தமது பிள்ளைகளுக்கான பணத்தை கட்டுகின்றார்கள்.

எனவே கிடைத்த பாடசாலையை ஆரம்பிக்க தெரியாமல் பெற்றோர்களிடம் பணத்தை வசூலித்து 27 லட்சங்களை செலவு செய்து விட்டு கோழைகளாக, அல்லது சதிகாரர்களாக செயறபடும் இவர்கள் இந்த சமூக சாபத்திலிருந்து அல்லாஹ்விடம் பதில் கூற பொறுப்பானவர்கள் என்பதை நினைவில் வைத்திருக்கட்டும்.



அரபாத் பஹர்தீன்



# முக்கோண ஒருநாள் தொடர்:
## தென்னாபிரிக்காவை விரட்டியடித்த
# நியூஸிலாந்து

பாகிஸ்தானில் இடம்பெற்றுவரும் முக்கோண ஒருநாள் தொடரின் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் கேன் வில்லயம்ஸனின் அசத்தல் சதத்தின் உதவியூடன் 6 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

பாகிஸ்தான், தென்னாபிரிக்கா மற்றும் நியஸிலாந்து அணிகள் மோதும் முக்கோண ஒருநாள் தொடர் பாகிஸ்தானில் இடம்பெற்று வருகின்றது. இதில் ஒரு அணி மற்றைய அணியூடன் ஒரு போட்டியில் பங்கேற்று முதல் இரு இடங்களைப் பெறும் அணி இறுதிப் போட்டிக்குள் நுழையும் வண்ணம் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய முதல் போட்டியில் நியூஸிலாந்து அணி பாகிஸ்தான் அணியை இலகுவாக வெற்றி கொண்டிருந்தது. இந்நிலையில் தொடரின் 2ஆவது போட்டி கடந்த 10ஆம் திகதி தென்னாபிரிக்க மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் லாஹூரில் இடம்பெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதற்கமைய களம் நுழைந்த தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப இளம் வீரரான மெத்யூவ் பிரீட்கே மிகச் சிறப்பாகத் துடுபெடுத்தாடி 150 ஓட்டங்களையும், வியான் முல்டர் 64 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க, 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் மேட் ஹென்றி 2 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

பின்னர் சவால்மிக்க 305 ஓட்டங்களை வெற்றி இலக்காக் கொண்டு பதிலுக்கு களம் நுழைந்த நியூஸிலாந்து அணிக்கு 3ஆம் இலக்க துடுப்பாட்ட வீரரான கேன் வில்லியம்ஸன் ஆட்டமிழக்காமல் 133 ஓட்டங்களை விளாசிக் கொடுக்க மற்றயை ஆரம்ப வீரரான கோன்வே 97 ஓட்டங்களை அதிரடியாகச் சேர்த்து கொடுக்க 48.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 308 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதுடன் இம் முக்கோணத் தொடரின் இறுதிப் போட்டிக்கும் தகுதி பெற்றது.

## விராட் கோஹ்லியை பின்தள்ளி இரண்டாம் இடம்பிடித்தார்



# கேன் வில்லியம்ஸன்

பாகிஸ்தானின் லாஹறில் இடம்பெற்ற தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் 133 ஓட்டங்களை கேன் வில்லியம்ஸன் பெற்றிருக்க ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் மிக வேகமாக 7000 ஓட்டங்களைக் கடந்த 2ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

நேற்றுமுன்தினம் லாஹூரில் இடம்பெற்ற போட்டியில் தென்னாபிரிக்கா அணி 304 ஓட்டங்களை குவித்தது. பின்னர் 305 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு கேன் வில்லியம்சன் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்த 133 ஓட்டங்களின் எதவியூடன் 48.4 ஓவரில் இலக்கை அடைந்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் நியூசிலாந்து 304 ஓட்டங்கள் எடுத்து போட்டியை சமநிலை செய்தபோது, கேன் வில்லியம்சன் 6997 ஓட்டங்கள் எடுத்திருந்தார். ஒரு ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் கேன் வில்லியம்சன் பவுண்டரி விளாசினர். இதனால் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றதோடு கேன் வில்லியம்சன் 7 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார்.

167 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள கேன் வில்லியம்சன் 159 இன்னிங்சில் 7 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார். இதன்மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் அதிவேகமாக 7 ஆயிரம் ஓட்டங்களை கடந்த 2 ஆவது வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

இதற்கு முன்னதாக விராட் கோலி 159 இன்னிங்சில் 7 ஆயிரம் ஓட்டங்களை கடந்திருந்தார். தற்போது விராட் கோலியை பின்னுக்கு தள்ளி வில்லியம்சன் 2 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

150 இன்னிங்சில் 7 ஆயிரம் ஓட்டங்களை கடந்து ஹாசிம் அம்லா முதல் இடத்தில் நீடிக்கிறார். ஏபி டி வில்லியர்ஸ் 166 இன்னிங்சில் கடந்து 4 ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெஸ்ஸி, ரொனால்டோவின் சாதனைகளை தவிடு பொடியாக்கி
## புதிய சாதனை படைத்தார்



# எம்பாப்பே

பிரான்ஸ் உதைப்பந்தாட்ட அணியின் முன்கள வீரரான கைலியன் எம்பாப்பே, நட்சத்திர வீரர்களான கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் லயனல் மெஸ்ஸி ஆகியோரை பின்தள்ள 500 தொழில் முறை கோல்களை உட்செலுத்திய இளம் வீரர் எனும் வரலாற்று சாதனையைப் படைத்தார்.

சான்டியாகோ பெர்னாபியூ மைதானத்தில் நடந்த லா லிகா போட்டியில் ரியல் மாட்ரிட் மற்றும் அட்லெடிகோ மாட்ரிட் அணிகள் மோதின. இவ் ஆட்டத்தின் 35வது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பில், அட்லெடிகோ மாட்ரிட் வீரர் ஜூலியன் ஆல்வரெஸ் கோல் அடிக்க முதல் பாதியில் 1:0 என மன்னிலை பெற்றது அட்லாட்டினா மெட்ரிட்..

அதனைத் தொடர்ந்து 2ஆவது பாதியின் 50வது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் நட்சத்திர வீரர் கைலியன் எம்பாப்பே ரியல் மெட்ரிட் அணிக்காக கோலொன்றை உட்செலுத்தினார். அதன் பின்னர் இரு அணிகளும் மேற்கொண்டு கோல் அடிக்காததால் போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

இப்போட்டியில் ரியல் மாட்ரிட் அணி 23 ஷாட்கள் அடித்தது. இதில் பெரும்பாலும் எம்பாப்பே உதவியுள்ளார். இதன்மூலம் வரலாற்றில் 500 தொழில் கோல் பங்களிப்புகளை எட்டிய இளைய வீரர் என்ற பெருமையை பெற்றார்.

26 வயதான கைலியன் எம்பாப்பே, ஜாம்பவான் வீரர்கள் கிறிஸ்டியானோ ரொனால்டோ, லியோனல் மெஸ்ஸி, நெய்மர் உட்பட பல ஜாம்பவான்களின் சாதனையை முறியடித்தார்.

மேலும் இந்த சீசனில் அனைத்து போட்டிகளிலும் 23 கோல்களுடன் ரியல் மாட்ரிட்டை எம்பாப்பே வழிநடத்துகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.